திசை
THISAI

BOOKS AND MAGAZINES

Wanted by Foreign Research Organisation books, magazines and pamphlets on all subjects pertaining to Sri Lanka.

Preference for publications in English published before 1948. Immediate payment. Please write in English giving details including name of author, year of publication and price expected to-

ZODIAC ENTERPRISES LTD.
227D, Galle Road, Colombo - 3 A 007

திசை 1 1-4-1989 சனிக்கிழமை விலை : ரூபா 3-50 முகம் 12

# வேலிக்கு ஓணான் சாட்சி

**வேலிக்கு ஓணான் சாட்சி சொல்ல முன்வந்தால், என்ன நடக்கும் என்பதனை தமிழ்ப் பழமொழி அன்றே உணர்த்திவிட்டது.**

**அதுவும், வேலியே பயிரைமேயும் பொழுது, ஓணானின் சாட்சி பொய்ச் சாட்சியாகத்தான் இருக்க முடியும்.**

அனுராதபுர மாவட்டத்தில், கரும்பூனைகளால் அண்மையில் நடாத்தப்பட்ட, நடாத்தப்பட்டுவரும், பயங்கர கொலை அட்டகாசத்தைப் புலன் விசாரணை செய்து, சூத்திரதாரிகள் யார் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு விசேட சி. ஐ. டி. குழுவொன்று, பெரும்பாலான கொலைகள் நடைபெற்ற எப்பாவெல என்னும் இடத்திற்கு (அனுராதபுர மாவட்டம்) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனப் பாதுகாப்புத்துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின பத்திரிகைகளுக்கு அறிவித்தபோது, பொது மக்களின் அறிவும் அனுபவமும் பொதிந்திருக்கும் இப்பழமொழிகளே நினைவிற்கு வந்தன.

அனுராதபுர மாவட்டத்தில் வாழும் சிங்கள மக்களுக்கு என்ன நடந்திருக்கின்றது என்பது நன்கு தெரியும்.

எப்பாவெலவில் நடைபெற்ற கண்ணி வெடித்தாக்குதலை அடுத்தே, இந்தக் கொலை அட்டகாசத்தை கரும்பூனைகள் (முன்னர் 'பச்சைப் புலிகள்' என்று தம்மை அழைத்துக் கொண்டவர்களின் வாரிசுகள்) கட்டவிழ்த்து விட்டன என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

அக் கண்ணிவெடிச் சம்பவத்தில் சில பொலிசார் இறந்ததும், சிலர் படுகாயமுற்றதும் தெரிந்ததே.

சி. ஐ. டி. திர விசாரிக்கும். சாட்சிகள் ஒருவரும் முன்வரவில்லை, பயத்தினாலோ என்னவோ, எனவே யார் இக் கொலைகளுக்கு பொறுப்பு என்பதனை திட்டவட்டமாக கூற

(12-ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்திரேலிய மண்ணில் இருந்து அறைகூவல்

"தமிழ் மாகாணங்களில் மக்கள் விரும்பியோ அல்லது விரும்பாமலோ மாகாண சபை அமைப்புமுறை நிர்வாகம் தோன்றக்கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பதைக் கவனத்தில் கொள்ளும் அதே வேளையில், தமிழ் மக்களின் விடிவுக்காக இதுகாலவரையில் போராடி உயிர்த் தியாகங்கள் புரிந்த தமிழ் இயக்கங்கள் தமது குறுகிய அரசியல் நோக்கங்களை ஈடேற்றுவதற்காக தொடர்ந்தும் அழிவுவாதப் பாதையில் செல்வது கண்டிக்கத்தக்கது"

"பொது எதிரி யார் என்பதை இனங்காணமல், ஒரு மண்ணில் பிறந்த சகோதரர்கள் — இளம் தளிர்கள் குரோத உணர்வுகளுடன் ஆட்கடத்தல்— பணயம் படுகொலை உட்பட்ட பல இனவிரோத செயல்களில் ஈடுபட்டு மக்களை தொடர்ந்தும் மரணபீதிக்கு ஆளாக்க வழிவகுப்பது புத்திபூர்வமான செயல் அல்ல"

இவ்வாறு, 'இலங்கையிலுள்ள தமிழ் விடுதலை இயக்கங்களுக்கு அவுஸ்திரேலியா தமிழ் மக்களின் பகிரங்க வேண்டுகோள்' என்ற தலைப்பில் விடுக்கப்பட்ட அறைகூவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொலைகளுக்கு கண்டனம்

கடந்த சில நாட்களாக யாழ் குடாநாட்டில் நடைபெற்றுவரும் கொலைகளைக் கண்டித்து தமிழீழ விடுதலைப் புலிகளும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும், ஈழதேசிய ஜனநாயக விடுதலை முன்னணியும் தனித்தனியாக அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களும் விலங்குகளும் அகதிகள்

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் அவல நிலையை நேரடியாகச் சென்று அறிந்த ஈழவர் ஜனநாயக முன்னணிக் குழு, இப்பொழுது அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் இராணுவத் தாக்குதல்களால் பொதுமக்கள் மிகப் பயங்கரமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கின்றது.

ஞாயிற்றுக் கிழமை (மார்ச் 26) இம்முன்னணி கூட்டிய பத்திரிகையாளர் மகாநாட்டில், அப்பகுதியில் வாழும் மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் என்றும், உணவு, உடை, மருத்துவவசதிகளின்றி அல்லல்படுகின்றனரென்றும் தெரிவிக்கப்பட்டது.

இயற்கைவளங்கள், குறிப்பாக தென்னந்தோட்டங்கள், காட்டுமரங்கள், விலங்கினங்கள் யுத்தநடவடிக்கைகளால் அழிக்கப்படுகின்றன என்றும், இதனால் உருவாகும் இயற்கைச் சமநிலையின்மையால் எதிர்காலத்தில் மிகப்பாரிய விளைவுகள் ஏற்படுமென்றும், முன்னணியின் பேச்சாளர் வலியுறுத்தினர். இந்த நடவடிக்கைகளால் காட்டுப்பன்றி

(12ஆம் பக்கம் பார்க்க)

## கரும் பூனைகளின் கைங்கரியங்கள் தொடர்கின்றன

சூட்டுக்காயங்களுடன் மூன்று சடலங்கள் மதவாச்சியிலுள்ள பூணுவை என்ற இடத்தில் சுடலையொன்றில் கண்டெடுக்கப்பட்டன.

இந்தப் பகுதியில் கரும்பூனைகள் நடமாடுவதால் அவர்களே இந்தக் கொலைகளைச் செய்திருக்கலாமெனப் பொலிசார் கூறுகின்றனர்.

கோரமாகக் குதறப்பட்ட நிலையில் நான்கு இளைஞர்களின் சடலங்கள், கலகிரியகம என்ற இடத்தில், பொலிசாரால் திங்கட்கிழமை (மார்ச் 27) கண்டு பிடிக்கப்பட்டன.

## திசைமுகம்

*"சுதந்திர ஒளியினில் மணங்குளி*
*அதன் வழி திசையெலாம் துலங்கவே"*

### ஜனநாயகத்தின் புதிய தேவை

ஜனநாயகம் என்பது, மக்களாலான, மக்களுக்கான, மக்களுடைய ஆட்சி என்பது லிங்கனின் பிரபல்யமான கூற்றாகும்.

மக்களுக்கும் ஜனநாயகத்துக்கும் உள்ள நெருங்கிய உறவையும் அதன் மேன்மையையும் காட்டும் சிறப்பான கூற்றாகும் இது.

அந்த ரீதியில் ஜனநாயகக் கோட்பாட்டை உலகுக்கு வழங்கிய ஆங்கிலேயர் இன்றும் அதன் பாரம்பரியங்களை நாடாளுமன்றத்தில் பேணி வருவது பாராட்டிற்குரியதே.

ஏன், அண்மையில் அமெரிக்க கொங்கிரஸ் ஜோன் ரவரின் அமைச்சர் நியமனத்தை, அவரது தனிப்பட்ட ஒழுக்கச் சீர்கேட்டை காரணங்காட்டி நிராகரித்தது கூட, இந்த ஜனநாயகப் பண்பையே காட்டுகிறது.

ஆனால் இன்று இவ்வழியைப் பின்பற்றுவனவாகக் கூறிக்கொள்ளும் வளர்முக நாடுகள் இந்த ஜனநாயகப் பண்பையே கேலிக்கூத்தாக்கியுள்ளன.

இன்று அரச பயங்கரவாதத்தையும், பயங்கரவாதச் சட்டங்களையும் கண்ணை மூடிக்கொண்டு அவிழ்த்துவிட்டிருக்கும் இலங்கை அரசு, தன்னை ஒரு ஜனநாயக நாடென்றே கூறுகிறது.

கபினற் ரகசியமான இந்திரா காந்தி கொலைபற்றி தர்கார் அறிக்கை அம்பலத்துக்கு வந்த பின்னரும் அதற்குப் பொறுப்பாய் இருந்தவர்களை விலக்காது ஆட்சியைப் பேணிக்கொண்டிருக்கும் இந்திய அரசும் தன்னை ஜனநாயக அரசென்றே அழைக்கிறது.

சட்டசபை அமர்வையே குழாயடிச் சண்டைபோலாக்கி, 'அடிபுடி'யில் இறங்கி கேலிக்கூத்தாடிய தமிழக அரசும் 'மக்களாட்சி'யின் உச்ச வெளிக்காட்டலே!

இது ஏன் ஏற்படுகிறது? காலங்காலமாக ஆண்டான் – அடிமை என்ற ஆட்சி முறையில் வந்த கிழக்கத்தேயப் பண்பாட்டிற்கு இந்த ஜனநாயகக் கோட்பாடுகள் அந்நியமானவை என்பதாலா?

அப்படியானால் அதே பண்பாட்டில் ஊறிவந்த ரஷ்ஷியா, இன்றைய கோர்பச்சேவ் ஆட்சியில், ஜனநாயகம் என்பது மக்களோடான (with the people) ஆட்சி என்று இன்னுமோர் படி முன்னுக்குப் பாயத் தயாராகுவது ஏன்?

அதே நேரத்தில் உள்நாட்டில் ஜனநாயகத்தைப் பேணுவதாகக் காட்டிக்கொள்ளும் இங்கிலாந்தும் அமெரிக்காவும் உண்மையான ஜனநாயக நாடுகளை கவிழ்க்கும் சதி நாசகார வேலைகளில் ஈடுபடுவது ஏன்? இது உண்மையான தரிசனம் மிக்க தலைமைகள் இல்லை என்பதைக் காட்டுகிறதா?

எனவே இனிமேல் ஜனநாயகம் என்பது, நாடுகளாலான, நாடுகளுக்கான, நாடுகளோடான ஆட்சியென்ற கோட்பாட்டின் கீழ், எல்லா நாடுகளையும் இயங்கவைக்கும் தரிசனம் மிக்க தலைமை ஒன்று உருவானால் தான் காப்பாற்றப்படுமா?

திசை
THISAI

ஆசிரியர் :
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள் :
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்-ரூபா: 200/-
அரைவருடம்-ரூபா: 100/

இந்தியா
ஒரு வருடம்-ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி :

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

பத்திரிகை விடயதானம், ஆசிரியர் தொடர்பு முகவரி:
267, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# ஈரோஸின் ஆசனங்கள் காலியானால்..

இலங்கையின் அரசியல் அமைப்புத் திட்டத்தின் 66 ஆவது சரத்து (ஊ) பிரிவின்படி முன்கூட்டியே அனுமதி பெறாமல் தொடர்ச்சியாக 3 மாதங்களுக்கு நாடாளுமன்றத்துக்கு சமுகம் அளிக்காதிருந்தால் அவ் உறுப்பினரின் பதவி இரத்தாகி விடும். இதன்படி ஈரோஸ் உறுப்பினர்கள் 13 பேரும் தொடர்ந்து 8 மாதம் நாடாளுமன்றம் செல்லாத பட்சத்தில் அவர்களது பதவிகள் இரத்தாகி விடும்.

இன்றைய அரசியல் அமைப்புத்திட்டத்தின்படி இவ்வாறாக ஒரு கட்சியின் அல்லது ஒரு சுயேச்சைக் குழுவின் முழுப்பதவிகளும், இரத்தாகி அவர்கள் புதிதாக உறுப்பினர்களைச் சேர்ப்பதில்லை என முடிவெடுக்கும் பட்சத்தில், அப்பதவிகளை நிரப்புவதற்கு மாற்றுவழிகள் எதுவும் தற்போது அரசியல் அமைப்பில் இல்லை. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் இடைத் தேர்தலுக்கு இடமே கிடையாது. எனவே ஈரோஸின் பதவிகள் இரத்தாகுமிடத்து அரசியல் அமைப்புத்திட்டம் ஒரு புது மாற்றுத் திட்டத்தைக்காண வேண்டிய நெருக்கடிநிலைக்குத் தள்ளப்படுகின்றது. இது அரசியல் அமைப்புத்திட்டத்தின் குறைபாட்டையே சுட்டி நிற்கிறது.

மேற்குறிப்பிட்டவாறு பதவிகள் வெற்றிடமாகும் போதும் அரசியல் அமைப்புத்திட்ட ரீதியாக மாற்றுத் தெரிவுமுறை எதுவும் இல்லாதபோதிலும் சாதாரண சட்டத்தின் மூலம் இவ்வாறான பதவிகளை நிரப்புவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கும் ஒருவிதி, அரசியல் அமைப்புத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ளது.

அதாவது 101 வது சரத்து (ஏ) பிரிவின்படி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அல்லது சுயேச்சைக்குழுவின் நியமனப்பத்திரத்தில் தமது பெயர்களைக் கொண்டுள்ள

**சிவபாலன்**

வேட்பாளர்கள் எல்லோரும் தேர்தல் மூலம் அல்லது வேறு வகையாகத் தீர்ந்து போன பின்னர் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான மாதிரியும் முறையும் பற்றி நாடாளுமன்றம் சாதாரண சட்டத்தின் மூலம் ஏற்பாடுகளைச் செய்யலாம். இதன்படி ஆளுங்கட்சி தான் விரும்பினால் புதிதாகப் 13 பேரை நியமிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கலாம் என ஒரு சட்டத்தைக் கூட கொண்டு வரலாம். இது அரசியல் அமைப்புத்திட்டத்தின் ஒரு கோமாளித்தனமான அம்சத்தையே காட்டுகிறது.

அதாவது ஒரு அரசியல் அமைப்புத் திட்டத்தில் மாற்றம் செய்வதற்கு 2/3 பெரும்பான்மைப் பலம் வேண்டும். ஆனால் மேற்குறிப்பிட்ட அம்சத்தினை நோக்கினால், சாதாரண சட்டத்தின்படி நினைத்தவாறு மாற்றம் செய்வதற்கு அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே அரசுக்கு இன்றுள்ள நெருக்கடி நிலையில் மேற்குறிப்பிட்டவாறு பதவி வெற்றிடமாகும் பட்சத்தில் ஏதாவது ஒரு தேர்தல் முறையின் மூலம் அரசு மாற்றம் செய்ய முனையும் என எதிர்பார்ப்பது கடினம். பெரும்பாலும் நினைத்தவாறு நியமனங்கள் நிகழவே வாய்ப்புண்டு.

ஈரோஸின் 13 இடங்களுக்கும், இனி என்ன நிகழும் என்பதைப் பார்ப்போம். தேர்தலில் வெற்றி பெற்ற ஈரோஸ் வேட்பாளர்கள் தாம் பதவிப் பிரமாணம் செய்வதற்கு முக்கியமான நான்கு முன்நிபந்தனைகளை விதித்துள்ளனர்.

1. வடக்கு–கிழக்கில் யுத்த நிறுத்தம்.

2. விடுதலை அமைப்புகளுடன் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை.

3. சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தல்.

4. தமிழ்பேசும் இனத்துக்கெதிராகவுள்ள 6ஆவது சரத்தை ரத்து செய்தல்.

இன்றைய அரசியல் சூழலை உற்று நோக்கும் போது இக்கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும் போல் தெரியவில்லை. அவ்வாறு நிறைவேற்றாத பட்சத்தில் ஈரோஸின் நிலைப்பாட்டில் நெகிழ்வு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு இல்லைப் போல் தெரிகிறது. எனவே பெரும்பாலும் ஈரோஸின் ஆசனங்கள் காலியாகும் வாய்ப்புகளே அதிகம்.

தமிழ் பேசும் மக்களின் அதிக ஆதரவைப் பெற்ற ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப் பெற்ற ஸ்தாபனமாக ஈரோஸ் உள்ளது. எனவே ஈரோஸின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க மறுப்பது தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக ரீதியான கோரிக்கைகளை மறுப்பதாகும்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் பிறந்த தினம் நேற்றாகும்.

## அன்று எஸ். ஜே. வி. சொன்னது

"எமது கனவை நனவாக்குவதே எமது இயக்கத்தின் அடுத்த திட்டமாகும். இவ்விஷயத்தில் பலரும் சந்தேகமுறுகின்றனர். துரதிர்ஷ்டவசமாக எமது சமீப காலத்தின் அரசியல் வரலாறு இச் சந்தேகத்திற்கு இடமளிப்பதாகவுள்ளது. பல முறைகளில் தலைவரென்போர் எங்களைக் காட்டிக்கொடுத்துவிட்டார்கள். வீரர்களாகக் காட்சியளித்து மக்களின் நம்பிக்கையைப்பெற்ற தலைவர்கள், ஒரு நாள் நிமிர்ந்து நின்று போராடி மறுநாள் களத்தையே விட்டு ஓடினர். 1934 ஆம் ஆண்டு தொடக்கமாக சேர் மகாதேவா அவர்கள் தமிழ்ப்படையின் முன்னணியில் நின்றார்; அவரது உற்சாகம் படிப்படியாகக் குறைந்து ஈற்றில் அவர் எதிரிகள் கட்சியிற் சேர்ந்தார். இப்படியே திருவாளர்கள் நடேசன், தியாகராசா ஆகி தமிழர்களின் உரிமைக்காக உழைப்பவர்களாயிருந்து, கடைசியில் 1945 ஆம் ஆண்டிலே தமிழ் மக்கள் பல ஆண்டுகளாக போராடிவந்த உரிமைகளை மறுக்கும் அரசியற் திட்டத்திற்கு வாக்களித்தார்கள். அண்மையிலே நமது உரிமைக்காக விட்டுக்கொடுக்காது போராடிவந்த திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் இப்பொழுது போராட்டத்தைக் கைவிட்டது மாத்திரமன்றி, இலங்கைத் தமிழ் மக்களிற்கு எவ்வித குறையுமில்லையென்று பறைசாற்றியும் வருகிறார்".

(18 - 12 - 1949 அன்று நிகழ்ந்த தமிழரசுக் கட்சியின் அங்குரார்ப்பண வைபவத்தில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆற்றிய உரையிலிருந்து. ஆதாரம்: இலங்கை தமிழரசுக் கட்சி வெள்ளி விழா மலரில் தீர்க்கதரிசனம்மிக்க தலைமைப் பேருரை? எனும் கட்டுரை.

## எழுத்தாளர் பயிற்சிப் பாசறை

"புதிய உலகம்' சஞ்சிகையால் வருகிற மே மாதத்தில் 'எழுத்தாளர் பயிற்சிப் பாசறை' யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவிருக்கிறது. சிறுகதை, கவிதை, நாவல், கட்டுரை ஆகியவற்றில் ஈடுபாடுள்ள இளம் எழுத்தாளர்கள் இதிற் கலந்து' கொள்ளலாம். தொலைவில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம், உணவு வசதிகள் என்பன செய்து கொடுக்கப்படும். ஆர்வமுள்ளோர் 15-4-89 க்கு முன்னர், எழுத்தாளர் பயிற்சிப் பாசறை, 'புதிய உலகம்', நற்சமூக நடுநிலையம்', இலக்.115, நான்காம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

உ

31-ம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பிதழும்



தோற்றம் : 1927—11—28 மறைவு : 1989—03—04

இராமாசிப்பிள்ளை முத்தையா
அவர்கள்

திருச்சிற்றம்பலம்

நோயுற்றிராமல் நொந்து மனம் வாடாமல்
பாயிற்கிடவாமல் பாவியேன் - காயத்தை
ஓர் நொடிக்குள் நீக்கியெனை யொண் போரூர் ஐயாநின்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து

திருச்சிற்றம்பலம்

பங்குனி 21-ம் திகதி ( 03-04-89 ) திங்கட்கிழமை வீட்டுக் கிரிகைகளும், அன்னாரின் நினைவாக மதிய போசனமும் இடம் பெறுவதால் அனைவரையும் அதில் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

இங்ஙனம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வளாக வீதி,
திருநெல்வேலி.

வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான இலகுவான நவீன கம்பியூட்டர் பயிற்சி
Computer Programming In dBASE III +
ஆரம்பம் : 2 / 4 / 89 ( சனி, ஞாயிறு வகுப்புகள் )
கட்டணம் : 1250 /= (பகுதி பகுதியாக செலுத்தலாம்)
பயிற்சிக்காலம்: 2 மாதம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
செய்முறைப் பயிற்சி IBM (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும் பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுநாள் :- 1 / 4 / 89

Unikco Computer Centre
No 5, Power House Rd
2nd Lane
Jaffna,
(Near Sub - Post Office)

* அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், கனடா, லண்டன் போன்ற நாடுகளுக்கு செல்ல விரும்புகின்றவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

* தாய்வான் செல்ல விரும்புகின்றவர்களும் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
சம்பளம் : 200 டொலர்.
3 வருட ஒப்பந்தம்.

* பாஹ்ரேன் * குவைத்
* சவூதி போன்ற நாடுகளுக்கும் பயணங்கள் மேற்கொள்ளப்படும்.

இவை எல்லாவற்றிற்கும் நாடவேண்டியது

V. T. R. Travels
41, 3rd Cross Street
Jaffna

# இலங்கை அரசியல் வரலாற்றில் இடதுசாரிகள் சாதித்தவை...?

கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வாவின் மரணத்துடன், இலங்கையில் மார்க்ஸிஸ இடதுசாரி அரசியல் வரலாற்றில் ஓர் அத்தியாயமும், ஒரு தலைமுறையும் முடிவுற்றுள்ளது. இலங்கையில் மார்க்ஸிஸ அரசியலை அறிமுகப்படுத்திய கலாநிதி என். எம். பெரேரா, பிலிப் குணவர்த்தன, டொக்ரர் விக்கிரமசிங்கா, லெஸ்லி குணவர்த்தன போன்ற முக்கிய முன்னோடிகளில் இவரும் ஒருவர். இந்த மூத்த முன்னோடிகளின் வரிசையில் எஞ்சி நின்று இறுதியாக காலமாகியவர், கொல்வினவார். எனவே, கொல்வினின் மரணத்துடன் ஒரு தலைமுறை முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் இத்தலைமுறையினரின் அரசியலைச் சரிவர மதிப்பீடு செய்யவேண்டியது அத்தியவசியமானதாகும். எப்போதும், எல்லா அரசியல் கோட்பாடுகளும் அரசியல் நடவடிக்கைகளும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். உடலிலுள்ள நோயினைக் கண்டறிந்து அதனை மாற்ற யாரும் தயங்குவதில்லை. அவ்வாறு செய்யத் தயங்கினால், விரைவில் நோய் வளர்ந்து அவனே அழிந்து விடுவான். இதே போலத்தான் ஒரு அரசியற் கருத்தும், கோட்பாடும், நடைமுறையும் பரிசீலனைக்கு உரியவை. தான் சார்ந்திருக்கும் கோட்பாடென்பதற்காக அதனைப் பரிசீலித்து பிழைகளை அகற்றத் தவறினால், அவன் தன் உடலிலுள்ள நோய்க்குப் பரிகாரம் காணத் தவறுபவன் போலாவான்.

இந்த வகையில், எந்த அரசியற் கோட்பாட்டைச் சார்ந்தவராயினும் அரசியற் பரிசீலனையை நன்கு வரவேற்க வேண்டும்.

இலங்கையில் மார்க்ஸிஸ இடதுசாரி அரசியலுக்கு ஏறக்குறைய 60 வருடப் பாரம்பரியம் உண்டு. ஆயினும் இவர்களால் நேரடியாக அரசியல் அதிகாரத்திற்கு வர இதுவரை முடியவில்லை; இது ஏன்? அப்படியென்றால் எங்கோ ஏதோ பிழைகள் இருக்க வேண்டும். இதனை ஆராய்ந்து உண்மைகளைக் காண முதலில் துணியவேண்டும்.

இலங்கையில் ரொட்ஸ்கிவாதிகள், மொஸ்கோவாதிகள், பீக்கிங்வாதிகள் என மூன்று வகையான மார்க்ஸிஸவாதிகள் இருக்கின்றனர். இவற்றை விடவும் வேறு சிறு சிறு போக்குக்களும் இருக்கின்றனர். ஆசியாவில் முதலாவது கொம்யூனிஸ்ற் கட்சி அமைக்கப்பட்ட நாடு இந்தோனேசியா, இரண்டாவது சீனு, மூன்றாவது இந்தியா, நான்காவது இலங்கை. ஆனால் உலகிலேயே ரொட்ஸ்கிவாதம் கோட்பாட்டு ரீதியாக வளர்ந்திருந்ததும் நாடாளுமன்றத்தில் பலம்பெற்றிருந்ததும் இலங்கையிற் தான். அவ்வாறு ரொட்ஸ்கி வாதத்தை பெருமளவு அடிப்படையாகக் கொண்ட கட்சி லங்கா சமசமாஜக் கட்சியாகும். இக்கட்சியின் முக்கிய கோட்பாட்டாளருள் ஒருவர் கொல்வின் ஆவார். மார்க்ஸிஸ பாரம்பரியத்தில் இலங்கைக்கென பல சிறப்பம்சங்கள் இருந்துள்ள போதிலும், இவர்களால் ஆட்சியதிகாரத்திற்கு வரமுடியவில்லையே ! மக்களைச் சரியான பாதையில் வழி நடத்தமுடியவில்லையே !!

குறிப்பிட்ட இந்த மார்க்ஸிஸ முன்னோடிகள் அனைவரும் அடிப்படையில், புரட்சிவாதிகளல்ல; உண்மையில் இவர்கள் சீர்திருத்தவாதிகளும், தொழிற்சங்கவாதிகளுமே. இவர்கள் என்னதான் புரட்சிவாதத்தைப் பற்றிக் கதைத்து வந்திருந்தாலும், புரட்சிகரத் தன்மைகள் அற்றவர்களாவர். இலங்கையில் மார்க்ஸிஸத்தின் தோல்வி தலைமைத்துவத்தின் தோல்விதான். அதில் கொல்வினுக்கும் பெரும் பங்குண்டு.

இலங்கையில் ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில், ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள் என்ற வகையில் இவர்கள் மிகவும் முற்போக்காளர்களாகக் காணப்பட்டனர். இக்காலகட்டத்தில் குறிப்பிடக் கூடியளவு புரட்சிகரத்தன்மை இவர்களிடமிருந்தது. ஆனால் அப்போதும் கூட முழுமையான புரட்சியாளர்களுக்குரிய பண்புகள் இவர்களிடமிருக்கவில்லை. ஆனால் ஏகாதிபத்தியக் காலத்திற் காணப்பட்ட தலைவர்களுள், ஒப்பீட்டு ரீதியில் சிறந்த தலைவர்களாக இருந்தனர்.

பிரித்தானியாவின் தொழிற்சங்கவாதம், அங்குள்ள தொழிற் கட்சி அரசியல் என்பவற்றால் கவரப்பட்ட தலைவர்களாக இவர்கள் இருந்தனர். பேராசிரியர் லஸ்கி என்பவர் ரொட்ஸ்கிஸ சார்பாளன். இவருடைய மாணவர்களாக இருந்த என். எம். பெரேராவும் ஏனைய சில ஆசிய மாணவர்களும் அவரின் சிந்தனையினாற் பெரிதும் கவரப்பட்டனர். எனவே ரொட்ஸ்கிஸ சார்பு, தொழிற்சங்க வாதம், தொழிற்கட்சி அரசியற் போக்கு என்பன எல்லாம் கூட்டுச் சேர்ந்து இலங்கையின் மார்க்ஸிஸ இடதுசாரி அரசியற் பாரம்பரியம் உதயமாகியது.

இங்கிலாந்தின் தொழிற் கட்சியை எவனாவது ஒருவன் ஒரு புரட்சிகரமான சோஷலிஸக் கட்சி என்று சொல்வானா ? அத்தகைய தொழிற் கட்சியின் இயல்பை உடையது தான் சமசமாஜக் கட்சியுமாகும். தொழிற் சங்கவாதத்திற்கு மேல், இலங்கையின் எந்த ஒரு இடதுசாரிக் கட்சியும் சென்றது கிடையாது. அதேவேளை இலங்கைத் தொழிற்துறையில் பின்தங்கிய ஒரு நாடு என்பதையும் கருத்திற் கொண்டால், இவர்கள் கட்டி வளர்த்த தொழிற் சங்கம் எவ்வளவு பலவீனமானதென்பதும் புலனாகும். இலங்கைத் தீவிற்குப் பொருத்தமான வகையில் வர்க்க நிலைமைகளை ஆராய்ந்து, அதற்கேற்ப நிர்மாணிப்புக்களை இவர்கள் மேற்கொள்ளவில்லை,

இவ்வாறு பார்த்தால் இலங்கையின் எந்தொரு மார்க்ஸிஸ இடதுசாரி அரசியல் வாதியும் தத்துவங்களை உருவாக்கியவர்களோ, அல்லது சூழலுக்கேற்ப தத்துவத்தை மெருகூட்டியவர்களோ, அல்ல. மாறாக, ரொட்ஸ்கிஸ ஸ்ராலினிஸ முறைமைகளை அப்படியே கோட்பாட்டு ரீதியாக பின்பற்றியவர்கள் தான். இவர்களது குருட்டுத்தனமான பின்பற்றல்கள் இந்த நாட்டின் இடது சாரி அரசியல் வரலாற்றை விரக்திக்கும், நம்பிக்கையின்மைக்கும் தள்ளியது.

1953ஆம் ஆண்டு மார்க்ஸிஸ இடதுசாரிகள் பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக இருந்தனர். அப்போது இவர்களால் நடாத்தப்பட்ட ஹர்த்தால் மிக வெற்றிகரமானதாகத் திகழ்ந்தது. அப்போதைய பிரதமராக இருந்த டட்லி சேனாநாயக்கா ஹர்த்தாலுக்கு ஈடுகொடுக்க முடி

**விடாக்கண்டன்**

யாமல், இறுதியில் பதவி துறந்தார். உண்மையில் இடதுசாரிகள் ஆட்சியைக் கைப்பற்றக் கூடிய அந்தச் சூழலில், தமது புரட்சிகரமின்மையால் அவர்கள் அதனைக் கைநழுவவிட்டு, ஒரு சமரசவாதிகளாய் மாறி, இறுதியில் சேர். ஜோன் கொத்தலாவலை பதவிக்கு வர வழிவிட்டனர்.

1953ஆம் ஆண்டு சந்தர்ப்பத்தைத் தவறவிட்ட இடதுசாரிகளிற்கு, பின்பு ஒரு போதும் அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கவேயில்லை. ஐ. தே. க. ஆட்சியாளர்கள் நடைமுறையிலிருந்து பாடத்தைக் கற்றுக் கொண்டு; தொழிற்சங்கவாதத்தைத் தோற்கடிக்கும் வித்தையில் கைதேர்ந்தனர்.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முற்பட்ட காலத்திலிருந்து ஒரு புறம் மார்க்ஸிஸ அரசியல்வாதிகள், மறுபுறம் தீவிர வலதுசாரி அரசியல்வாதிகள் என இரு அணியினர் இருந்தனர். ஆனால், பண்டாரநாயக்காவின் ஸ்ரீ.ல.சு.க. ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக வளரத் தொடங்கி, 1956ஆம் ஆண்டு அவர் ஆட்சிக்கு வந்ததிலிருந்து மார்க்ஸிஸ இடது சாரிகளுக்கும் தீவிர வலது சாரிகளுக்கும் இடை நடுவான கட்சியின் அரசியல், செல்வாக்குப் பெற்றது. பண்டாரநாயக்காவின் கோஷங்களில் அரைவாசிக்கு மேல், மார்க்ஸிஸ இடது சாரிகள் முன்வைத்த கொள்கைகளைப் பிரதிபலிப்பது போல இருந்தன. அவை உடனடி நடைமுறைச் சாத்தியமுள்ளவையாகவும், கவர்ச்சிகரமானவையாகவும், கவர்ச்சிகரமான இனவாத முலாம் பூசப்பட்டவையாகவும் இருந்தன. பண்டாரநாயக்காவினதும் அவரது கட்சியினதும் எழுச்சியுடன் மார்க்ஸிஸ இடது சாரிகளுக்கு ஒரு பிரதியீடு என்ற நிலைக்கு ஸ்ரீ. ல. சு. க. வந்தது.

1956ஆம் ஆண்டு தேர்தலில் பிலிப் குணவர்த்தனவின் 'புரட்சிவாத லங்கா சமசமாஜக் கட்சி' பண்டாரநாயக்காவின் ம. ஐ. மு. இல் ஒரங்கமாகியது. கொம்யூனிஸ்ற்றுகளும், லங்கா சமசமாஜிஸ்ற்றுகளும் சில தொகுதிகளில் பண்டாரநாயக்காவுடன் கூட்டுச் சேர்ந்தனர். இவற்றின் மூலம், ஓர் இடது சாரி என்ற அங்கீகாரத்துக்கு பண்டாரநாயக்கா உள்ளானார்; ஐ. தே. க. விற்கு எதிரான மாற்றரசாங்கத்தை அமைக்கக் கூடியவர் என்ற நிலைக்கும் அவர் உள்ளானார்.

1956ஆம் ஆண்டுடன், இந்த மார்க்ஸிஸ இடது சாரிகள் தமது தத்துவக் கோளாறுகளின் உச்சக் கட்டத்தை அடைந்தனர்; கையாலாகாத்தனத்தின் முழு உருவமாயினர். இதன் பின்பெல்லாம், ஸ்ரீ. ல. சு. க. வுடன் கூட்டுச் சேர்வதைத் தவிர இவர்கட்கு வாழ்வே இல்லையென்ற நிலை வந்தது. ஆதலினால் தான் 1970ஆம் ஆண்டு, அம்மையாரின் முந்தானைச் சேலையால் தமது முகத்தை மூடிக்கொண்டனர்,

அவ்வாறு அம்மையாரின் சேலையால் தமது முகத்தை இறுக்கி மூடிக்கொண்ட மகாவித்துவான்களில் ஒருவர் கொல்வின் ஆவார். உடம்பு சிவப்பு சேட்டாலும் முகம் நீலச் சேலையாலும் வர்ண ஜாலம் பெற்றது.

இலங்கையின் இன்றைய இரத்தம் தோய்ந்த அரசியல் வாழ்விற்கும், தமிழ் மக்களின் இரத்தம் தோய்ந்த துயரங்களுக்கும், 1970—77 ஆண்டுக்கான ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலம் பல அடித்தளங்களை இட்டது. அவ்வாறு இடப்படுவதற்குரிய அரசியற் திட்டத்தை வரைந்தவரும், அதற்குரிய, அரசியல் நடைமுறைகளை பின்பற்றியவரும் கொல்வின் என்பதை, நாம் மறந்துவிடக் கூடாது. மொழிப் பிரச்சினை, மலையக மக்களின் பிரஜா உரிமை, வாக்குரிமை போன்ற விடயங்களில் முற்போக்கான கொள்கைகளையும் நடைமுறைகளையும், அவர் ஆரம்பத்தில் கொண்டிருந்தார். ஆனால் பிற்காலத்தில், இவையும் சந்தர்ப்ப வாதத்திற்கு ஏதோ ஓர் அளவில் பலியிடப்பட்டன.

அடிப்படையில், இலங்கையின் மார்க்ஸிஸ இடதுசாரி அரசியலில் மிகப் பெரும்பான்மையினர் தொழிற்சங்கவாதிகளே தான். அவர்கள் புரட்சிவாதிகளல்லர். மேலும் சந்தர்ப்பவாதிகளுமாவர்.

கொல்வின் ஏகாதிபத்தியத்தின் கீழ் புரட்சிகரக் குணங்களைக் கொண்டிருந்தார். சுதந்திரத்தின் பின்பு தனது புரட்சிகரத்தை இழந்தார், மொழிப் பிரச்சினையிலும் மலையக மக்கள் பற்றிய பிரச்சினைகளிலும் ஆரம்பத்தில் சில முற்போக்கான குணங்களைக் கொண்டிருந்தார், ஆனால், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விஞ்ஞானபூர்வமான தீர்வற்றவராக இருந்தார், தொழிற் கட்சி, தொழிற்சங்கவாதம், சீர்திருத்தவாதம் போன்ற இயல்புகளைக் கொண்டிருந்தார்; இனவாதிகளுடனும் கூட்டுச் சேர்ந்தார். மொத்தத்தில் இவை அனைத்தும் இணைந்த ஒரு கலவையாய்- சாம்பாராய் இருந்தார். இறுதியில் சந்தர்ப்பவாதியாகவே தனது வாழ்வை முடித்துள்ளார்.

வரலாற்றில், ஒரு சந்தர்ப்பவாதி என்ற பெயருக்குப் பொருத்தமுள்ளவராய்த்தான் இறுதியில் மாறினார். இவரின் ஒருசில நல்லம்சங்களை மனதில் இருத்துவோம். ஆனால் மொத்தத்தில், இவரும் இவரது சகாக்களும் மார்க்ஸிய இடதுசாரி அரசியல் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவர்களல்ல, மாறாக மார்க்ஸிஸத்திற்கு இவர்கள் கெட்ட உதாரணங்கள் — பின்பற்றப்படமுடியாதவர்கள். O

## உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிப்பான்

குடிக்கும் நீர் சிறிது உப்பாக இருந்தால் கூட எம்மால் அருந்த முடிவதில்லை. ஆனால் சில வேளைகளில் கூடிய உப்புத் தன்மையுள்ள நீரை அருந்த வேண்டியிருந்தால் அது எந்த உப்பாக இருந்தாலும், நஞ்சுத்தன்மை இல்லாவிடில் அடிக்கடி தாகம் ஏற்படும்.

உடலின் தேவைக்கு அதிகமாக குருதியில் காணப்படும் உப்பு, சிறுநீரின் மூலமாக பெருமளவில் வெளியேற்றப்படுகின்றது. மேலதிகமாக உள்ள உப்பை அகற்றுவதற்காக அடிக்கடி சிறுநீர் கழிக்கப்படுவதால், உடம்பில் உள்ள நீரின் அளவு குறைந்து செல்லுகின்றது. உடற்தொழிற் தாக்கங்கள் சிறப்புற நடைபெற முடியாமல் போய்விடுகிறது. தாகம் ஏற்படுகின்றது. நீரை அருந்தும்போது உடலில் இருந்து இழக்கப்பட்ட நீர் மீண்டும் ஈடுசெய்யப்படுகின்றது.

ரகுவரன்

# நெருக்கடிகளின் உளவியல் தாக்கங்கள்

## எமது சூழலில் ஒரு பரிசீலனை

கொ. றெ. கொன்ஸ்ரன்ரைன்

நாம் பல்வேறு வகையான நெருக்கடிகளைச் சந்திக்கிறோம். போர், இயற்கை அழிவுகள், பஞ்சம், அகாலமரணங்கள் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். ஆயினும் இவற்றின் உளவியல் ரீதியான பாதிப்பு வெகுகாலமாக ஆராயப்படாமலேயே இருந்து வந்திருக்கிறது. அண்மைக்காலங்களில் குறிப்பாக எழுபதுகளில் வியற்நாம் போரிலிருந்து நாடு திரும்பியவர்களிலும், அவர்களினது குடும்பத்தினரிலும் ஏற்பட்ட பாரிய உளவியல் தாக்கங்கள் அமெரிக்க உளவியலாளர்களின் கவனத்தைத் தம்பால் ஈர்த்தன.

இதனைத் தொடர்ந்து அப்பாதிப்புகளின் காரணங்களையும், அதன் தன்மைகளைப்பற்றியும் பல்வேறு ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. இதன் விளைவாக நெருக்கடிக்குப் பின்னான உளவியல் தாக்கங்கள் நன்கு அவதானிக்கப்பட்ட, ஆராயப்பட்ட ஒரு பிரிவிற்குள் அடக்கப்பட்டுள்ளன.

எம் மண்ணில் நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கும் அனர்த்தங்களின் உளவியல் வீழ்படிவுகளைப் பற்றிய தகுந்த தரவுகளைப் பெறுவதும், அவற்றின் நிவர்த்திக்கான அணுகுமுறைகளை வகுப்பதும், இக்காலகட்டத்தின் இன்றியமையாத தேவைகளில் ஒன்றாகும். நாம் கண்டது ஒரு போர்க்கால நெருக்கடி. எதிர்பாராத இறப்புகள், எதிர்பாராத சம்பவங்கள், தொடர்ந்து வரும் ஒரு பதட்டநிலை இவையெல்லாம் உடனடியாகவும், நீண்டகாலத்திலும் எமது உளநிலையில் பாதிப்புகளை ஏற்படுத்தவல்லன.

உடமைகளின் இழப்பு, அவயவங்களின் இழப்பு, உற்றார் உறவினரின் இழப்புகள் ஆகியவையும் பாரிய உளத்தாக்கங்களுக்கு இட்டுச் செல்வதனை நாம் நாளாந்தம் காண்கின்றோம்.

எமது வரலாற்றுத் துன்பியல் காலகட்டத்தின் பாரிய உளத்தாக்கங்களைத் தாங்கிவருபவர்களாக, இந்தப்பிரச்சினையின் காரணமாகக் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டோரைக் குறிப்பாக சித்திரவதைக்குள்ளாகுபவர்களைக் குறிப்பிடலாம். இவர்கள் உடலியல் ரீதியிலும், உளவியல் ரீதியிலும் பாதிக்கப்படுகிறார்கள். இவர்கள் விடுதலை செய்யப்பட்ட பின்பும், நாளாந்த வாழ்வில் சந்திக்கும் சில அவர்களின் கடந்த நிகழ்வுகளை குறிப்பிடும் குறியீடுகளாக ளாக அமைவதனால் (உதாரணமாக சப்பாத்து ஒலி), அவர்கள் மீண்டும் அந்த துன்பம் நிறைந்த தாக்கத்தினூடாகச் செல்கிறார்கள். (Reexperiencine ol trauma) பலரில், பயங்கரக் கனவுகளும் கிலிகொள்ளும் தன்மைகளும் காணப்படும். முன்னர் சாதாரணமாக எல்லோருடனும் பழகி சமூகவாதிகளாக இருந்த சிலர், மற்றவர்களுடன் பழக விரும்பாது, சமூகத்திலிருந்து பிரிந்துவாழும் எத்தனத்தையும் காட்டுவார்கள். உணர்வு ரீதியாகவும் இவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். சிலர் உணர்வுகளைக் பிரதிபலிக்காத விறைத்த நிலைக்கும் தள்ளப்படுகிறார்கள். சந்தேகம், நம்பிக்கையின்மை போன்ற குணங்களும் அதிகரிக்கின்றன. மற்றும் பதட்டநிலை, நித்திரைக்குழப்பம், அக்கறையின்மை, மறதி, கவனமின்மை, போன்றவையும் அவதானிக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட எல்லாவகையான தாக்கங்களும் எல்லோருக்கும் ஏற்படுவதில்லை. ஒருவரின் மனோபாவம், சமூகத்துணைகள் போன்றவற்றைப் பொறுத்து தாக்கத்தின் பரிமாணம் வேறுபடும்.

இவர்களில் பெரும்பாலானோர்க்கு மருத்துவ சிகிச்சையும் ஒரு உடனடித் தேவையாகக் காணப்படுகிறது. இப்படிப்பட்டவர்கள் நிச்சயமாக இந்த உளத்தாக்கங்களிலிருந்தும் விடுபடுவது, மிகவும் முக்கியம். அல்லாவிடில் நீண்டகாலநோக்கில் அவர்களது ஆளுமையும், தனித்தன்மையும் மிகவும் பாதிப்படையும் அபாயம் உண்டு.

நெருக்கடிகளினால் மிகவும் முக்கியமாகப் பாதிக்கப்படும் இன்னுமொரு குழுவினர், குழந்தைகளும் சிறுவர்களுமாவர். பல்வேறு நாடுகளிலும் நிலவிய நெருக்கடிகள் குழந்தைகளிலும், சிறுவர்களிலும் ஏற்படுத்திய பாதிப்புகளும், அவற்றுக்கான நிவாரணமுறைகளும் அண்மைக்காலங்களில் சர்வதேச ரீதியில் ஆராயப்பட்டு வருகின்றன. போர் அல்லது நெருக்கடிகள் இவர்களில் ஏற்படுத்தும் தாக்கத்தைவிட பெற்றோரின் பிரிவு, பெற்றோரின் இழப்பு, பாதுகாவலரின் பிரிவு என்பன பாரிய தாக்கங்களை ஏற்படுத்தவல்லன.

குழந்தைகளுக்கு, நேரடியாகச் சூழலின் மாற்றங்களைக் கிரகிக்கும் தன்மை குறைவு. இவர்கள் சூழலின் நெருக்கடிகளைப் பெற்றோரினூடே பெறுகிறார்கள். அதாவது பெற்றோர்களில் ஏற்படும் மாற்றம், அவர்கள் தங்களுடன் பழகும் விதத்தின் மாற்றம், இப்படியாக அவர்களுக்கும் அதிருப்தி ஏற்படுத்தக் கூடிய இன்னோரன்ன மாற்றங்கள் அவர்களைப் பெரிதும் பாதிக்கின்றன.

குழந்தைகளது கற்பனையில் பெற்றோர்கள் பெரும் பலசாலிகள். அவர்களை மிஞ்சி ஒன்றும் தங்களை அணுகாது என்பது அவர்களின் நம்பிக்கை.

ஆனால் நெருக்கடிகளால் பெற்றோரும் பாதிக்கப்படுகையில், அவர்களின் கற்பனை உலகு உலுப்பப்படுகிறது.

குழந்தைகளைப் பொறுத்தவரை காலை எழுந்ததிலிருந்து இரவுமட்டும் நிகழும் கிரமமான நிகழ்வுகள் உதாரணமாக முகங்கழுவுதல், உணவருந்துதல், பாடசாலைக்குச் செல்லுதல் நண்பர்களுடன் விளையாடுதல் போன்றவை. காலத்தின் நிச்சயத்தினையும், ஒரு தளம்பலற்ற சூழ்நிலைத் தன்மையும் குறிப்பிடும், குறியீடுகளாக விளங்குகின்றன. ஆனால் நெருக்கடிகாரணமாக வேறு இடங்களுக்குச் செல்லும்போது அல்லது அகதி முகாம்களில் இருக்கும்போது,



இந்த நாளாந்த நடவடிக்கைகள் குழப்பமடைகின்றன. இது நிச்சயமற்ற தன்மையின் குறியீடாகிறது.

குழந்தைகளின் இவ்வகையான உளத்தாக்கங்களின் பாதிப்பு, வெவ்வேறு வகைகளில் அவர்களது நடத்தைகளில் பிரதிபலிக்கப்படலாம். கீழ்ப்படிவின்மை, அதிகம் குழப்பம் செய்தல், சிடுசிடுப்புத் தன்மை என்பவை ஒரு விளைவாக அமையலாம். இதற்கு எதிர்மாறாக சில சமயங்களில் எதிலும் கலந்து கொள்ள மனமில்லாத ஒரு உள்ளொடுங்கும் தன்மையும், இலயிப்பின்மையும் காணப்படலாம். அநேக குழந்தைகள், தங்கள் வளர்ச்சிப்படிகளின் ஆரம்பநிலைகளில் இருந்த பழக்க வழக்கங்களை மீண்டும்கடைப்பிடிக்க ஆரம்பிப்பார்கள், உதாரணமாக விரல் சூப்புதல், எப்போதும் பெற்றோருடன் அணைந்திருத்தல், நித்திரையில் சிறுநீர் கழித்தல் போன்றவை.

குழந்தைகளைப் பொறுத்தவரையில் பெற்றோரை குடும்பத்தை விட்டுப் பிரிந்திருப்பது, நெருக்கடி சூழலில் தொடர்ந்து பெற்றோருடன் இருப்பதைவிடப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. இயலுமானவரை அதே சூழலில் அதே நண்பர்களுடன் வாழ்வது இப்பாதிப்புக்களைப் பெருமளவு மட்டுப்படுத்தும். எவ்வகையான பாதிப்புகள் குடும்பத்திற்கு ஏற்பட்டாலும் குழந்தைகட்குக் காட்டப்படும் அன்பும், அரவணைப்பும் தொடர்ந்து மாறாதிருப்பது அவசியம். கவனிப்பு குறையுமேயாகில் இந்தப் பாதிப்புகள் ஏற்பட தாங்கள்தான் ஏதோ விதத்தில் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்ற குற்ற உணர்வு குழந்தைகளில் ஏற்படும். ஆகவே உளத்தாக்கங்களைக் குறைக்க, பெற்றோர்களும் மற்றவர்களும் அன்பையும் அரவணைப்பையும் மேலதிகமாகக் காட்டுவது முக்கியமாகிறது.

நெருக்கடி காலங்களில் குடும்ப அங்கத்தவர்களுக்கிடையேயான பிணைப்பு அகதிரிக்கிறது. அவர்கள் தனித்தனியாக இயங்காது அநேக வேளைகளில் கூட்டாக, ஓர் குழுவாக முடிவெடுப்பதையும் செயல் படுவதனையும் நாம் காணலாம். இப்படியான சந்தர்ப்பங்களில் உற்றார் உறவினர்கள் இணைந்து ஒரு கூட்டாகச் செயற்படும் போது, நெருக்கடிகளைச் சந்திக்கும் மனோவலிமை ஏற்படுகிறது. அதே வேளை இழப்புகளின் உளப்பாதிப்பும் குறைகிறது.

இதைப் பற்றிச் சிந்திக்கையில் எமக்கு, பிள்ளைகளைப் பிரிந்து வாழும் பெற்றோர்களும் பெற்றோரைப் பிரிந்து வாழும் பிள்ளைகளும் ஞாபகத்திற்கு வருகிறார்கள். இவர்கள் பிரிந்து வாழும் காரணம் தற்காலநெருக்கடிகளுடன் சம்பந்தப்பட்டதாகவோ, அன்றேல் சம்பந்தப்படாததாகவோ இருக்கலாம். ஆனால் இவர்களின் பிரிவு, நெருக்கடி காலத்தில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும். தந்தையாரைப் பிரிந்து வாழும் குழந்தைகளில் ஏற்படும் தாக்கம் இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் உற்றார்உறவினருடன்வாழாது தூரத்தில் வாழும் குடும்பங்களையும் நெருக்கடிகள் அதிகம் பாதிக்கின்றன. எமது சமுதாயத்தைப் பொறுத்தளவில், பெரும்பாலான இடங்களில் உறவினர்கள் அக்கம் பக்கத்திலேயே வாழ்கிறார்கள். இப்படியான வாழ்முறை எமது சமுதாயத்தின் தாங்குதிறனை அதிகரிக்கிறது.

பிள்ளைகள் பெற்றோரை விட்டு விட்டு வெளிநாடு செல்வது இப்பொழுதெல்லாம் சாதாரண நிகழ்வாகி விட்டது. இதன் காரணமாக உதவியற்ற நிலையில் வாழவேண்டிய நிலைக்கு, எமது சமுதாயத்தில் பல வயோதிபர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். ஆகவே வயோதிபரில் ஏற்படும் தாக்கங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. நெருக்கடிகள் ஏற்படும் போது உடனடியாக அதன் யதார்த்த பரிமாணத்தை ஏற்றுக்கொள்ளும் தன்மையும், அதனின்று விலகுவதற்கான நடவடிக்கைகளில் இறங்கும் தன்மையும், வயோதிபர்களில் இல்லை. இவர்கள் வெகு தாமதமாகவே யதார்த்தச் சூழ்நிலையைக் கிரகிக்கின்றார்கள். இதற்கு மேலாக, அநேகரில் வேறு நோய்களும் இருப்பதனால் இவர்கள் பாதிப்படையும் சந்தர்ப்பம் அதிகம். சாதாரண பாதிப்புகளால் உளத்தாக்கமும் அதன் வெளிக்காட்டலும் இவர்களில் குறைவாகவே உள்ளன. ஆயினும் ஆயுட்கால சேகரிப்புகள், வீடு போன்றவை சேதமடையும் பொழுது உளத்தாக்கங்கள் பெருமளவில் வெளிக்காட்டப்படுகின்றன, மற்றைய சந்தர்ப்பங்களில் இவர்கள், பாதிப்புகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது குறைவு. அதே வேளை கிடைக்கக் கூடிய அதி குறைந்த வசதிகளை வைத்துக் கொண்டு, பாதிப்புகளில் இருந்து ஓரளவிற்காவது தங்களை விடுவித்துக் கொள்கிறார்கள். இதன் காரணமாக வயோதிபர்கள் உதவி நிறுவனங்கள், அரசாங்க உதவி ஸ்தாபனங்களின் உதவியை நாடுவது குறைவு.

மேற்குறிப்பிடப்பட்ட பரந்த தாக்கங்களினால் பொதுவாக, இந்தச் சமுதாயத்தின் எல்லோருமே தாக்கப்பட்டுள்ளார்கள் எனலாம். ஆயினும், நாம் முன்பு கருதியதைப் போல ஒருவரின் மனோபலம், சமூகத்துணைகள் போன்றவற்றைப் பொறுத்து தாக்கத்தின் பரிமாணம் வேறுபடுகிறது. ஒரு சாராரில் உளத்தாக்கம் மனநோய்களுக்கு இட்டுச் செல்வதனையும், ஏற்கனவே மனநோயினால் பீடிக்கப்பட்டிருப்பவர்களில் நோயின் தன்மை உக்கிரமடைவதினையும், ஆய்வுகள் காட்டுகின்றன.

இவை எல்லாம் எமது சமுதாயத்தின் எதிர் காலத்தில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியன. குழந்தைகளிலும் சிறுவர்களிலும் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், தக்க அணுகுமுறைகளினூடாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும். அன்றேல் இந்தச் சந்ததி மட்டுமன்றி அடுத்த சந்ததிகளும் தொடர்ந்த உளப்போராட்டத்தினூடாகவே வாழ நேரிடும். O

---

''விவாகரத்துக்கு, முக்கிய காரணம் என்ன?''

''கலியாணம் செய்துகொள்வது''

O O

''நீ மின்கம்பத்தில் மோதிய போது யார் காரை ஓட்டிக் கொண்டிருந்தது?''

''ஒருவருமில்லை, நாங்கள் எல்லோரும் பின்சீற்றில் இருந்தோம்.''

O O

''இருதார குற்றச்சாட்டில் சுற்றவாளியாகக் காணப்பட்டுள்ளாய். நீ வீட்டுக்குப் போகலாம்.''

''நன்றி ஐயா......எந்த வீட்டுக்கு?''

## அறிவியல் உலகம்

# காற்றுக் கடல்

இர. சந்திரசேகரன்

நாம் காற்றுக்கடலின் அடியில் வாழ்கிறோம். காற்றுக்கடல் நமக்குமேலே விரிந்து பரந்து செல்கிறது. வானம் நீலமாகத்தெரிவதற்கு இந்தக் காற்றுக்கடல்தான் காரணம்.

காற்றை நாம் வளி என்றும் சொல்லலாம். வளியினூடாகச் சூரிய ஒளி முறிவடைந்து வருவதனால்தான் வானம் நீலமாகத் தெரிகிறது.

நம்மைச் சூழ்ந்துள்ள காற்று எல்லாம் திடீரென இல்லாமற் போகிறது என்று வைத்துக் சொள்வோம். அப்போது வானத்தின் நீல நிறம் அற்றுப் போகும்; சூரியனும் நட்சத்திரங்களும் இருண்ட வானத்தில் ஒளிப்புள்ளிகளாய் மினுங்கும்; காலை புலருமுன் ஒளிமெல்லப் பரவிவராது; மாலையில் சூரியன் மறையும்போது செக்கர் வானத்தையும், மஞ்சள் வெய்யிலையும், ஒளிமெல்லக் குறைய இருள் மூடிவரும் மயக்கும் காட்சிகளையும் நாம் காணமுடியாது; வானவில்லும் தோன்றுது.

இதுவெறும் கற்பனைதான். ஏனென்ல் காற்று இல்லாமற் போனவுடனேயே நாம் உயிர் வாழமுடியாமற் போய்விடும்; மற்ற உயிர்கள் அனைத்தும் இறந்துவிடும். ஆனல் காற்றில்லாத வானம் இருண்டு தான் இருக்கும். பாறைகள், மண், ஏரிகளிலுள்ள நீர், ஆறுகள், கடல் என்பன எப்படி பூமியின் பகுதிகளாக இருக்கின்றனவோ அப்படியே வளிமண்டலமும் பூமியின் ஒரு பகுதியாகும்.

வளி சிலவேளைகளில் அசைவுகள் குறைந்து காணப்படுகிறது; சிலவேளைகளில் அசைகிறது. வளியின் வேகத்தை அளக்கும் கருவிக்கு காற்று வேகமானி (Anemometer) என்று பெயர். காற்று வேகமானியை வளிமண்டல ஆராய்ச்சி நிலையங்களிலும் விமானத்தளங்களிலும் பொதுவாக அனைவரும் கண்டிருக்கலாம். இக்கருவியின் கிண்ணங்களில் வீசும் வளிபடும்போது அவை சுழல்கின்றன. வளி மெதுவாக வீசினல் அவை மெதுவாகச் சுழல்கின்றன; வேகமாக வீசினல் அவை வேகமாகச் சுழல்கின்றன. கீழே இருக்கும் ஓர் அளவீடு, வளியின் வேகத்தை மணித்தியாலத்திற்கு எத்தனை மைல் என்று காட்டுகின்றது.

மணித்தியாலத்திற்கு 12 மைல் வேகத்திலோ அல்லது அதற்குக் குறைந்த வேகத்திலோ வீசும் வளி தென்றல் அல்லது இளங்காற்று ஆகும். 25 மைல் வேகத்தில் வீசும் காற்றை வலுவான இளம் காற்று எனலாம். 50 மைல் வேகத்தில் வீசும் காற்றைப் புயற்காற்று என்போம்.

1878 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் திகதி மவுண்ட் வாஷிங்டன் என்ற இடத்தில், இதுவரை அளவிடப்படாத வேகத்தில் வளி வீசியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்று வீசிய வளி மணிக்கு 186 மைல் வேகத்தில் வீசியது.

இதுதான் மிகவேகமாக வீசிய வளி எனக்கொள்ள முடியாது. இதைவிட வேகமாக வளி வீசியிருக்கலாம். பெரும் புயல் அல்லது சுழற்காற்றின்போது காற்றுவேகமானி வளியின் வேகத்தைத் திருப்திகரமாக அளக்கமுடியாததாக இருந்திருக்கலாம். சுழற்காற்று அல்லது சூறவளியின்போது வளியின் வேகம் மணிக்கு 500 மைலளவு உயர்ந்ததாகவும இருக்கக்கூடுமென்று சில விஞ்ஞானிகள் சொல்கிறார்கள்.

விமான ஓட்டிகள் வளியின் திசை, வேகம் முதலியவற்றை அறிந்திருத்தல் மிக முக்கியமானதாகும். வளி எத்திசையிலிருந்து வீசுகிறதோ அத்திசையை நோக்கியே, அதாவது வளியை எதிர்த்தே அவர்கள் விமானத்தை நிலத்திலிருந்து எழுப்புகிறார்கள்: இறங்கும் போதும் வளியை எதிர்த்தே இறங்குகிறார்கள்.

வளிமண்டலத்தில் பலூன்கள் மிதப்பதைப் பார்த்திருப்பீர்கள். வளியைவிடப் பாரம் குறைந்த ஏதோவாயுவால் அவை நிரப்பப்பட்டிருக்கவேண்டும்.

அக்காலத்தில் வெப்பமான ஒளியை நிரப்பி பலூன்களை அனுப்பினர். வெப்பவளி குளிரான வளியை விடப் பாரம் குறைந்ததல்லவா? பலூனின் வாயில் சுவாலை ஒன்றினை எரியவிட்டார்கள். அதனல் பலூனினுள் இருந்த வாயு வெப்பமடைந்து கொண்டேயிருந்தது; பலூனும் மேலெழுந்து சென்றது. அண்மையில் இந்தியாவில்–தமிழ் நாட்டில் இப்படியொரு பலூனை மிதக்கவிட்டனர்; ஆட்கள் கூட அதில் ஏறிச் சென்றனர்.

மிகவும் பாரம் குறைந்த வாயுவாகிய ஐதரசனை பிற்காலத்தில் நிரப்பி அனுப்பினார்கள். ஐதரசன் பாரம் குறைந்த வாயுதான். ஆனல் அது எளிதாக எரியக்கூடியது. அதனல் ஈலியம் பயன்படுத்தப்பட்டது. ஈலியம் வாயு எரியமாட்டாது. அதுமிகவும் அரிதானதால் விலைகூடியது.

வளிமண்டலத்திலுள்ள முக்கியமான வாயுக்கள் நைதரசன், ஒட்சிசன், காபனீரொட்சைட்டு என்பனவாகும்.

வளிமண்டலத்திலுள்ள வாயு தூய ஒட்சிசனகவே இருந்தால் எப்படியிருக்கும்?

ஒட்சிசன் தனியாக இருந்தால் தீயை நாம் இப்போது அணைப்பதுபோல் எளிதாக அணைத்து விடமுடியாது; எமது உடம்பிலுள்ள உணவுப் பொருட்கள் மிக விரைவாக எரிந்து விடுகின்றன; அதாவது சமித்துவிடுகின்றன. இதனல் நாம் மிகுந்த சக்தி வாய்ந்தவர்களாக இருக்கக்கூடும். ஆனல் விரைவில் தேய்வடைந்துவ்டுவோம்.

எல்லா விலங்குகளும் ஒட்சிசனைப் பயன்படுத்துகின்றன. நெருப்பு ஒட்சிசனைப் பயன்படுத்துகின்றது. வளியில் உள்ள ஒட்சிசன் முடிந்துவிட மாட்டாதா என்ற ஒரு சந்தேகம் எழலாம்.

பகல் நேரங்களில் பச்சைத் தாவரங்கள் ஒட்சிசனை வெளிவிடுகின்றன. தாவரங்கள் இல்லாவிட்டால் பல காலத்திற்கு முன்னரே ஒட்சிசன் முழுவதும் முடிந்து போயிருக்கும்.

வளியில் காபனீரொட்சைட்டு மிகக் குறைவாக இருப்பதும் நமக்கு நன்மைதான். காபனீரொட்சைட்டு பாரம் கூடிய வாயு. நைதரசனின் அளவில் காபனீரொட்சைட்டு இருக்குமானல் அது நம்மை மூடி மூச்சடைக்கச் செய்துவிடும்; அது நிலமட்டத்தில் சேர்ந்து நின்று ஒட்சிசனை மேலே தள்ளிவிடும்; நமக்குத் தேவையான ஒட்சிசனை நாம் பெறமுடியாமற் போய்விடும்.

நமது வளிக்கடல் பல அடுக்குகளைக் கொண்டது. பூமியோடிருக்கும் அடுக்கு மாறன் மண்டலம் (Troposphere) எனப்படும். இது 5 தொடக்கம் 10 மைல் வரை உயரமுடையது. மாறன்மண்டலம் பூமத்திய ரேகையில் அதிக உயரமுடையதாகவும் துருவங்களில் உயரம் குறைந்ததாகவும் இருக்கிறது.

மாறன் மண்டலத்திற்கு மேலே படை மண்டலம் (Stratosphere) இருந்தது. இது 50 மைல்வரை உயரமுடையது. இதன்மேலேயுள்ள அயன்மண்டலம் (Ionosphere) 350மைல் வரை விரிந்து செல்கிறது.

அயன் மண்டலத்திற்கு மேலே உள்ள பகுதியில் வளித்துணிக்கைகள் மிக ஐதாக இருக்கின்றன. மேலே செல்லச் செல்ல வளித்துணிக்கைகள் விலகி, விலகி, இடைவெளி பெரிதாகிச்சென்று, சில ஆயிரம் மைல்களுக்கு மேல் வளித்துணிக்கைகள் இல்லாமலே போய்விடுகின்றன. இவ்வாறு விரிந்து கிடக்கும் பகுதி வெளி மண்டலம் (Exosphere) எனப்படும்.

1957 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதத்தில் மேஜர் டேவிட் ஜீ. சைமன்ஸ் என்பவர் கடல் மட்டத்திற்குமேல் 1,02000 அடிவரை பலூனில் ஏறிச் சென்றார். இது மனிதன் பலூனில் மிதப்பதில் ஒரு சாதனை ஆகும்.

மாறன் மண்டலத்திலேயே நமக்குப் பழக்கமான காற்று வீசுகிறது; புயல் அடிக்கிறது; முகில்கள் தோன்றுகின்றன. 1958 இல் மல்கம் ரோஸ் என் ம் லீ. லெவிஸ் என்பவரும் பலூனில் ஏறி படை மண்டலத்தில் 34 மணிநேரம் இருந்தனர். நான்கு மைலுக்குக் கீழே மாறன்மண்டலத்தில் இடிமின்னற்புயல் ஏற்பட்டதை அவர்கள் மேலேயிருந்து அவதானித்தனர்.

மாறன் மண்டலத்திலேயே ஆகாயவிமானங்கள் பறக்கின்றன. ஜெட் விமானங்களும், றெக்கட் விமானங்களும் படை மண்டலத்தினுள் உயரத்திற்குச் சென்றிருக்கின்றன.

படை மண்டலத்தில் மிகச் சிறிதளவு ஒட்சிசனே இருக்கிறது. அங்கு வானம் கறுத்தே காணப்படும். சூரிய ஒளியைச் சிதறச்செய்து வானத்தை நீல நிறமாக்கப் போதுமான வளி அங்கு இல்லை. இரவும் பகலும் நட்சத்திரங்கள் பிரகாசித்துக் கொண்டேயிருக்கின்றன. வானத்தில் முகில்கள் காணப்படுவதில்லை.

படைமண்டலத்தில் மிக உயரத்தில் ஒட்சிசன் ஓசோனக இருக்கின்றது. இது சூரியனின் தீங்கு விளைவிக்கும் ஊதாக்கடந்த கதிர்களை (Ultra Violet Rays) பூமிக்கு வரவிடாமல் தடுக்கிறது.

அயன் மண்டலத்திலேதான் ஆகாயக் கற்கள் காணப்படுகின்றன. அவை வேகமாக விழும்பொழுது, காற்று வெப்பமாகி, அவை ஆவியாகிவிடுகின்றன. இவற்றையே நாம் இரவில் எரி நட்சத்திரங்களாகக் காண்கிறோம். O

## முதலைக் கண்ணீர்

செய்யக்கூடாத காரியத்தை செய்தபின்பு செய்த காரியத்திற்காக போலியாக வருந்திக் கண்ணீர் வடிப்பவர்களை நாம் "முதலைக்கண்ணீர்'' வடிக்கின்றார் என்று கூறுகின்றோம்.

முதலையானது இரையை விழுங்கிய பின்பு அதன் கண்களின் ஓரமாக நீர் வடிந்து கொண்டிருக்குமாம். செய்வதையும் செய்துவிட்டு இப்போது போலியாக கண்ணீர் வடிக்கின்றதே—இதனல்தான் முதலைக் கண்ணீர் என அழைக்கின்றனர்.

முதலை இரையை உண்ணும்போது இரையிலும் தண்ணீரிலும் உள்ள உப்புகள், முதலையின் உடலுக்கு மேலதிகமாவதால் கண்களின் அருகில் உப்புச் சுரப்பிகள் மூலமாக உப்புகள் நீருடன் வெளியேறுகின்றது. விழியோரமாக உப்புநீர் வெளியேறுவதையே முதலை கண்ணீர் வடிக்கின்றது எனக்கூறுகின்றோம்.

— ரகுவரன்

## திசை THISAI 2000 - ரூபா பரிசுச் சிறுகதைப் போட்டி

சிறுகதை இலக்கியத்துறைக்கு வளமூட்டும் நோக்கோடும், சகல எழுத்தாளர்களையும் — இளம் தலைமுறையினர், எழுதாமல் இருக்கும் பழந்தலைமுறையினர் — ஆகிய சகலரையும் ஊக்குவிக்கும் நோக்கோடும் சிறுகதைப் போட்டியொன்றை நடாத்தத் திசை தீர்மானித்துள்ளது.

### பரிசு விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | : | 750/=ரூபா |
| இரண்டாம் பரிசு | ; | 500/=ரூபா |
| மூன்றும் பரிசு | ; | 250/=ரூபா |
| ஆறுதல் பரிசுகள் | : | ஒவ்வொன்றும் 100/=ரூபா வீதம் ஐந்து பரிசுகள் |

### நிபந்தனைகள்

1) சிறுகதைகள் அனைத்தும் எழுதுவோரின் சொந்தப் படைப்புகளாக இருக்கவேண்டும்.
2) இதற்கு முன்னர் வேறு எங்காயினும் வெளியிடப்படாதவையாக இருக்கவேண்டும்.
3) எந்தப் பிரச்சினையையும் மையமாக வைத்து எழுதப்படலாம்.
4) ஒருவர் எத்தனை கதைகளையும் அனுப்பலாம். ஆனல், கதைகள் ஒவ்வொன்றும் முழுத்தாளில் (பூல்ஸ் கப் தாள்) பத்துப் பக்கங்களிற்கு மேற்படாமல், தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்
5) எழுத்தாளரின் பெயர், புனைபெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட்டிருக்க வேண்டும்
6) போட்டி முடிவு திகதி 3-5-1989
7) சிறுகதைப் போட்டி, ஆசிரியர் 'திசை', 267 பிரதான வீதி, யாழ்ப்பாணம். என முகவரியிடப்பட்டு, கதைகள் அனுப்பப்படவேண்டும்.
8) திசை ஆசிரியருடன் மேலும் இருவர் கொண்ட நடுவர் குழுவின் முடிவே, இறுதியானது.
9) பரிசுக் கதைகளும், தரமான ஏனைய கதைகளும் திசை யில் தொடர்ந்து வெளியிடப்படும். □

**கலைச்சாரல்**

# குழந்தைகள் கலை, இலக்கிய வளர்ச்சிக்குப் போராடிய அழ. வள்ளியப்பா

*16-3-1989 இல் மறைந்த கவிஞர் அழ. வள்ளியப்பாவுக்கு அஞ்சலியாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.*

தமிழில் நவீன குழந்தை இலக்கியத்துறையின் முன்னேடி என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையை ஏற்றுக்கொள்வது மரபு. 'குழந்தைக் கவிதைகள்' என்ற நூலுக்குப் பதிப்புரை வழங்கிய நாக. முத்தையா, ''கவிமணி அவர்கள் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் ஏற்பட்ட தேவையின் நிர்ப்பந்தத்தினலேயே இத்துறையில் கவனம் செலுத்தியிருக்கிறார்கள்'' என்று கவிமணியின் குழந்தை இலக்கிய ஈடுபாட்டுக்கான காரணத்தை விளக்குகிறார். இதனை வழிமொழிவார் போலப் பேராசிரியர் க. கைலாசபதி, ''பொதுவாகவே குழந்தைப் பாடல்களும் ஏனைய குழந்தை இலக்கிய வடிவங்களும் பள்ளியாசிரியர்களால் பெருமளவிற்கு வளர்க்கப்பட்டு வந்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்'' என்று கூறுகிறார். (நவீன இலக்கியத்தின் அடிப்படைகள், ப.60) தலைகளின் எண்ணிக்கை அடிப்படையில் இது பெரும்பாலும் உண்மையே எனினும், தர அடிப்படையில் நோக்கும் போது இது முழு உண்மையல்ல என்பது புலனாகும்.

ஆசிரியரல்லாத ஒருவர் குழந்தை இலக்கியத்தில் ஈடுபட்டார். குழந்தைகளுக்கென்றே தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். தமது பதின் மூன்றும் வயதில் எழுதத் தொடங்கிய அவர் ஏறத்தாழ அரை நூற்றுண்டு குழந்தைகளுக்காகவே எழுதினர். வங்கியில் நாற்பத்தோராண்டுகள் பணி செய்த அவர் குழந்தை இலக்கியத்துக்குத் தேவையின் நிர்ப்பந்தத்தினல் வரவில்லை.

> ''குழந்தைகளுடன் நெருங்கிப் பழகும்போது நமக்கும் குழந்தை உள்ளம் உண்டாகிறது. நாமும் குழந்தையாகி விடுகிறோம். அப்போது நம்முள்ளத்தில் தோன்றும் பாடலே குழந்தைப் பாடலாக அமைகின்றது என்று நான் நினைக்கிறேன்''

என்று அவர் குழந்தைக் கவிதைத் துறைக்கு வந்ததற்கான காரணத்தை விளக்குகிறார். இவ்வாறு நிர்ப்பந்தம் காரணமாக வன்றி இலக்கிய நோக்கம் காரணமாகக் குழந்தை இலக்கியத் துறைக்கு வந்த அவர் அழ. வள்ளியப்பா

குழந்தைகளுக்காக ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ள அழ. வள்ளியப்பா கவிதை, கதை, நாடகம், வாழ்க்கை வரலாறு என்ற பல துறைகளிலும் சிறுவர் நூல்களை எழுதியுள்ளார். எனினும், குழந்தைக் கவிதைத்துறையிலேயே அவர் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். இதனல் குழந்தைக் கவிஞர், மழலைக் கவிச் செம்மல், பிள்ளைக் கவியரசு முதலிய கவிதைசார் பட்டங்களை அவர் பெற்றார். அவரது சிறுவர் இலக்கிய நூல்கள் பல பாரத மத்திய அரசினதும் தமிழக அரசினதும் பரிசுகளைப் பெற்றன.

**மயிலங்கூடலூர் பி. நடராசன்**

குழந்தைகளுக்கு எழுதுவதோடு மட்டும் குழந்தைக் கவிஞர் நின்றுவிடவில்லை. குழந்தைகளின் கலை, இலக்கிய வளர்ச்சிக்குப் பணியாற்றும் ஓர் இயக்கமாக அவர் இயங்கினர். எழுத்தாளர்களையும் குழந்தைகளையும் ஒன்று திரட்டிக் குழந்தைகளின் கலை, இலக்கிய வளர்ச்சிக்கு அயராது உழைக்கும் பணியாளராக, போராளியாக அவர் விளங்கினர்.

தமிழில் குழந்தை இலக்கியம் செல்வாக்குப் பெருது இருந்த காலத்தில், வளர்ந்தோருக்காக எழுதுவோர் அவ்வப்போது சிறுவருக்கும் சில படைப்புக்களை ஆக்கி வெளியிட்டு வந்த காலத்தில், அழ. வள்ளியப்பா குழந்தை எழுத்தாளர்களை இனங்கண்டு, ஒன்றுகூட்டி, குழந்தை எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கினர். 1950 ஆம் ஆண்டில் குழந்தை எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கி, 1955 ஆம் ஆண்டு வரை அதன் செயலாளராகப் பணியாற்றினர். 1956 முதல் 1961 வரை அதன் தலைவராக விளங்கினர். 1961 முதல் 1967 வரைசங்கத்தின் ஆலோசகராகப் பணியாற்றினர். பின்னர் மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எழுத்தாளர்களை ஒன்று கூட்டிக் கலந்துரையாடவும் அதன் மூலம் குழந்தை இலக்கியத்தின் பரப்பு விரிவடையவும் தரம் உயரவும் வழி வகுத்தார். எழுதியோர் குழந்தைகளுக்காக நிறைய எழுத முன் வந்தனர். புதிய புதிய குழந்தை எழுத்தாளர்கள் உருவாகினர்கள்.

குழந்தை இலக்கியத்துக்கு அவர் ஆற்றிய பணிகளின் சிறப்பினல் 1957 ஆம் ஆண்டு அழ. வள்ளியப்பா தென்மொழிகள் புத்தக அறக்கட்டளை நிறுவனத்தில் குழந்தைப் புத்தக அலுவலராக நியமிக்கப்பட்டார். ஐந்தரை ஆண்டுகள் இப்பணியில் ஈடுபட்டு, தமிழிலும் பிற தென்மாநில மொழிகளிலும் பல குழந்தை நூல்கள் வெளிவரவும் பரிசும் பாராட்டும் பெறவும் காரணமானர். குழந்தைகளுக்காக மட்டுமே எழுதிவந்த அவர் 1956 ஆம் ஆண்டு முதல் தமிழ் எழுத்தாளர்சங்கத்தில் பொருளர், செயலர், தலைவர் முதலிய பொறுப்புள்ள பதவிகளை வகித்துவந்தார். இது குழந்தை இலக்கியத் துறையின் செல்வாக்கு வளர்ச்சிக்குச் சான்ருக அமைந்தது.

பரிசு ஓர் எழுத்தாளனை உருவாக்குவதில்லை. என்ற போதிலும் அவனுக்கு ஓர் உந்து சக்தியாக அமைகிறது. ஒரு நூலுக்கு நிதிப் பரிசு கிடைக்கும் போது அது வேருெரு நூல் உருவாகக் காரணமாகிறது. இவ்வுண்மைகளை உணர்ந்த அழ.வள்ளியப்பா ஏ. வி. மெய்யப்பச் செட்டியாரைத் தூண்டி, ஏ. வி. எம். அறக்கட்டளை நிறுவக் காரணமாயமைந்தார். இந்நிறுவனம் ஆண்டுதோறும் தமிழில் வெளியாகும் சிறந்த குழந்தை இலக்கியங்களுக்குப் பரிசு வழங்கி வருகிறது. வேறு பல பரிசுத் திட்டங்கள் உருவாகவும் அழ. வள்ளியப்பா தூண்டுதல் அளித்தார்.

குழந்தை எழுத்தாளர் சங்கம் நூற்கண்காட்சி மூலமும் பிறவகைகளிலும் காலத்துக்குக் காலம் குழந்தை இலக்கியங்களை மக்களுக்கு அறிமுகம் செய்து வந்ததால், குழந்தை இலக்கிய நூல்களை வாங்குவோர் தொகை மிகுந்தது. பதிப்பாளர்கள் குழந்தை எழுத்தாளர் சங்க ஆண்டு விழாவையொட்டிப் பலநூல்களை ஆண்டுதோறும் வெளியிடும் மரபும் ஏற்பட்டது. சென்னையில் குழந்தை புத்தக நிலையம் நிறுவப்பட்டது. அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கிய வளர்ச்சியை பற்றி இடைவிடாது எண்ணி, திட்டமிட்டு, நடைமுறைப்படுத்தி வந்ததால், இன்று ஏறத்தாழ மூவாயிரம் சிறுவர் நூல்கள் தமிழ்க் குழந்தைகளுக்குக் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

குழந்தை எழுத்தாளர் சங்கம் மூலம் கால்நூற்றுண்டுக்கு மேலாகக் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு பணியாற்றிய குழந்தைக் கவிஞருக்கு 1983 க்குப் பின்னர் 'கோகுலம்' என்ற சிறுவர் இதழ் மூலம் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. 'பேனு முனை வாள் முனையிலும் ஆற்றல் வாய்ந்தது' என்பர். 'கோகுலம்' சிறப்பாசிரியர் என்ற வகையில், 'அருமைச் சிறுவர் சிறுமியரே ......' என்று விளித்து அழ. வள்ளியப்பா குழந்தைகளோடு நேரடியாக உரையாடி வந்தார். குழந்தைகள் கலை, இலக்கிய வளர்ச்சிக்குக் குழந்தைகளே அணி திரண்டு போராடத்தூண்டும் வகையில் அவரது கருத்துக்கள் அமைந்து வந்தன.

1986ஆம், ஏப்ரல் 'கோகுலம்' இதழில் 'கேளுங்கள் சொல்கிறோம்' பகுதியில்,

> ''எங்களுக்கும் ஓட்டுப்போடும் உரிமை இருந்தால், 'எங்களுக்கான திரைப்படங்களை எடுங்கள். எங்களுக்கு ஆங்கிலத்திலும் இந்தியிலும் இருப்பதுபோல் கலர்ப் படங்களுடன் புத்தகங்கள் வெளிவர ஏற்பாடு செய்யுங்கள். இல்லாது போனல் ஓட்டுப்போட மாட்டோம்' என்று தகராறு செய்யலாம் அல்லவா?''

என்ற ஒரு வினு வெளியாகியது.

> ''கல்வி கற்க வேண்டிய காலத்தில் தகராறு கிளர்ச்சி என்று ஆரம்பித்தால் படிப்புப் பழாகிவிடுமே. இதற்குப் பதிலாக, நம் தமிழக முதல்வருக்கு மிகப் பணிவான ஒரு வேண்டுகோள் எழுதி, அதில் நூற்றுக்கணக்கான சிறுவர் சிறுமியர் கையெழுத்துப்போட்டு அனுப்பினல் நிச்சயம் பலன் கிடைக்கும்''

என்று பதிலளிக்கப்பட்டது. 'முதல்வருக்கு வேண்டுகோள்' என்ற தலைப்பில் கடிதமும் வெளியிடப்பட்டது. 8500 குழந்தைகளின் கையெழுத்துகள் கொண்ட கடிதங்கள் முதல்வருக்கு அனுப்பப்பட்டன. இதற்குப் பெரும்பயன் கிடைக்கவில்லை. முதல்வர் நோயுற்றார். அண்ணு தி.மு.க. அரசு வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. அரசின் செயலின்மையை அழ. வள்ளியப்பா பல இதழ்களில் நாகரிகமாகக் கண்டித்து வந்துள்ளார். 1987யூன் இதழில் அழ.வள்ளியப்பா இவ்வாறு எழுதினர்:

> ''உங்களைப் போன்ற குழந்தைகளுக்கு நல்ல நூல்களை அழகிய படங்களுடன் மலிவான விலையில் வெளியிட ஒரு நிறுவனத்தை அமைக்க வேண்டுமென நம் தமிழக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சென்ற நவம்பர் மாதம் குழந்தைகள் நாளில் விருப்பம் தெரிவித்தார்கள். அந்த நிறுவனத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் அவர்கள் தற்போது எடுத்து வருவதாக அறிகிறோம்''.

இந்த ஆசிரியத் தலையங்கத்தில் நம்பிக்கையைவிட நம்பிக்கையீனமே இழையோடுகிறது.

தமிழக ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் முடிவடைந்த பின், அழ.வள்ளியப்பா ஒன்றிய நூலகங்களில் குழந்தை நூலகப்பிரிவு அமைக்கப்பட வேண்டுமென வலியுறுத்திக் கோகுலத்தில் எழுதினர். அவ்வாறு எழுதப்பட்ட இதழை ஒன்றியத்தினர்க்குக் காட்டி வலியுறுத்தும்படி சிறுவர்களுக்குக் கூறினர்.

நூலகங்கள் சிறுவர் நூல்களை வாங்காமல் இருப்பதற்கு வெளியான நூல்கள் பற்றிய விபரங்கள் கிடைக்காமையே காரணம் என்பது குழந்தைக் கவிஞரின் கருத்து. எனவே, தமிழில் ''குழந்தைப் புத்தக விவரத் தொகுப்பு'' என்ற ஒரு நூலைத் தமிழக அரசு வெளியிடவேண்டும் என்ற கருத்தையும் வெளியிட்டுள்ளார்.

சிறுவர்களுக்கான திரைப்படங்கள் தயாரிக்கப்பட வேண்டும்; சிறுவர்களுக்கான அரங்குகள் அமைக்கப்படவேண்டும். என்ற கருத்துகளையும் குழந்தைக் கவிஞர் கோகுலத்தில் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார். அரசிடம் இவற்றை நிறைவேற்றுமாறு வேண்டுகோள் விடுத்த அவர் திரைப்படத் தயாரிப்பாளர்களையும் தூண்டி வந்தார். அவர்களும் சாதகமான கருத்துகளைத் தெரிவித்தார்கள். தொடர்ந்து அவர்களைத் தூண்டி, சிறுவர் திரைப்படங்கள் வெளிவர ஆவன செய்வேன் என அவர் உறுதி கூறியிருந்தார்.

சிறுவர்களைப் பெருமை மிக்கவர்களாக மதித்து அவர்களது தேவைகளையும் நிறைவு செய்யவேண்டும் என்ற எண்ணம் எமது சமூகத்தில் ஏற்படவில்லை. ஏற்படவேண்டும் என்று அழ.வள்ளியப்பா வாழ்நாள் முழுவதும் உழைத்தார். குறிப்பிடத்தக்க வெற்றிகளையும் பெற வழிவகுத்தார். எனினும் நிறைவேருதவையே அதிகம்.

> ஏடு தூக்கிப் பள்ளியில்
> இன்று பயிலும் சிறுவரே
> நாடு காக்கும் தலைவராய்
> நாளை விளங்கப் போகிருர்

என்று சிறுவர் உலகத்தை நம்பிக்கையோடு நோக்கினர் அழ.வள்ளியப்பா. இந்த நம்பிக்கையோடு பலர் சிறுவர் கலை, இலக்கிய வளர்ச்சிக்கு உழைக்கவேண்டிய தேவை அந்த ஒருவர் மறைவால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது. O

## தழுவல் புள்ளிகள்

'இன்ரர்ஜெக்ஷன்' என்பதற்கு யாரோ தவறுதலாக ஆச்சரியக்குறி என்று பெயர் அமைத்து விட்டார்.' அதனை வியப்புக்குறி என்றும் சொல்லுவர். இரண்டுமே தவறு. அதை உணர்ச்சிக்குறி என்றே கூறவேண்டும். 'ஐயோ ! என் செல்வத்தை இழந்தேனே !' என்னும் வாக்கியத்தில் வியப்புப் பொருள் உண்டா? இல்லை இங்கே இருப்பது இழப்புணர்ச்சியே. நன்னூற் காண்டிகை உரையாசிரியர்களுள் ஒருவரான ஆறுமுகநாவலரும் 19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலேயே தமது நான்காம் பாலபாடத்தின் இறுதியில் அதனை மெய்ப்பாட்டிசைக்குறி என்றார்; மெய்ப்பாட்டிசைக்குறி என்பதும் உணர்ச்சிக்குறி என்பதும் ஒரு பொருளன்ரே.

—கண்ணன்

நன்றி : நல்ல தமிழ் எழுத வேண்டுமா ? □




டொக்ரர்

# எம். கே. முருகானந்தனின் இரண்டு நூல்கள்

## எயிட்ஸ்

**'யதார்த்தா' வெளியீடு, பருத்தித்துறை**
**ஜனவரி 1989. பக் 35 + vi**
**விலை: ரூபா 10/-**

"நோய் வந்த பின் தீர்ப்பதைவிட, வருமுன் காப்பது சாலச் சிறந்தது" என்பது அனுபவ வாக்கு.

இந்த அனுபவ வாக்கின் பின்னணியிலேயே நாம் டொக்ரர் முருகானந்தனின் நூலை அணுக வேண்டும். எங்கள் நாட்டில் ஓரளவு சகல துறைகளிலும் நோய்களுக்கேற்ப வைத்திய வசதிகளும் அதேபோல் வருமுன் காக்கும் முறைகளும் சொல்லப்பட்டுள்ளன. ஆனல் மக்களில் பலர் அதனைச் சரிவரப்புரிந்து கொள்ளுமளவு விழிப்புணர்வு கொள்வதில்லையென்றே சொல்லவேண்டும். தமிழ்நாட்டில் வானெலி, மாதாந்த, வாராந்த சஞ்சிகைகள், தனிப்பட்ட நூல்கள் மூலமாகவும் நோய்கள், சிகிச்சை முறை, வருமுன் காத்தல் இவற்றைத் தெளிவாக மக்களுக்கு விளங்கப்படுத்துவதை நாங்கள் கேட்கிருேம். விஷேஷமாக வானெலியில் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளுமளவு இருவர் உரையாடல் மூலம் தரப்படுகிறது. இதே போன்று நம் நாட்டிலும் டொக்ரர் ஸ்ரீதேவா, டொக்ரர் முருகானந்தன் போன்றவர்களின் முயற்சி பெரிதும் வரவேற்க வேண்டியதொன்றே.

டொக்ரர் முருகானந்தனின் மற்றுமோர் முயற்சி ஒவ்வொரு வியாதிகளைப் பற்றியும் தனிப்பட நூல் உருவில் தெளிவாக விளக்கமாக மக்கள் மத்தியில் பதிய வைப்பதே. இவ்வகையில் அவர் வெளியிட்ட நூல்கள்;

1. சிறுவர்களின் கண்களைக் காக்க வாரீர்.
2. தாயாகப் போகும் உங்களுக்கு ... ...
3. எயிட்ஸ் என்பனவைகளாகும். இவை அனைத்திலும் "எயிட்ஸ்" என்னும் நூல் நம்மில் பலரின் கவனத்தை ஈர்க்கக் கூடியது.

எயிட்ஸ் ஒரு பாலியல் பயங்கரத் தொற்று நோய். இது ஒரு நுண்ணிய இன வைரஸ் கிருமியினுல் ஏற்படுகிறது. இது 1981 ஆம் ஆண்டில் முதல் முதலாக அமெரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டது. அதிவேகமாக பரவி வரும் இவ்வியாதி அமெரிக்கா, பிரான்ஸ், மாலாவி, கென்யா போன்ற உலகத்நில் பல நாடுகளில் பரவி வருவதாகவும் தற்போது இலங்கைக்குள் நுழைந்து யாழ்ப்பாணத்திலும் ஒரு எயிட்ஸ் நோயாளி கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் போது, நாங்கள் மிகுந்தளவு கவனம் கொள்ளாமல் இருக்க முடியுமா ? அல்லாமலும் நம் இளஞ் சந்ததியினர் அதிகமாக சுவிஸ், ஜேர்மன், பிரான்ஸ், கனடா, அமெரிக்கா, லண்டன் என்று பல பகுதிகளுக்கும் படையெடுத்துக் கொண்டிருக்கும் போது, அங்கு பரவி வரும் இவ்வியாதியினுல் நம்மவர்களும் தாக்கப்பட்டால் நம் நாட்டிலும் இவ்வியாதி அதிவேகமாகப் பரவும் என்பதில் ஐயமில்லை. ஆகவே டொக்ரர் முருகானந்தன் சரியான நேரத்தில் சரியான முறைப்படி இந்நோயைப் பற்றிய விளக்கங்களை "எயிட்ஸ்" என்னும் நூல் மூலம் தெளிவுபடுத்தி "வருமுன் காக்கும்" ஒரு நிலைப்பாட்டினைத் தந்தமைக்கு, நாம் மிகுந்தளவு கடமைப்பாடு உடையவர்களாக இருக்கவேண்டும்

டொக்ரர்
**சி. கணேஷ்**

AIDS என்பது (Acquired Immune Deficiency Syndrome) என்ற நான்கு சொற்களின் முதல் எழுத்துக்களை ஒன்றிணைத்துத் தரும் சொற்பதமாகும். இதனைத் தேடிப் பெற்ற நிர்பீடனக் குறைபாட்டு நோய்த் தொகுதி என்றும் இதனை உண்டாக்கும் வைரஸை (H. I. V) (Human Immuno Deficiency Virus) நிர்பீடன குறைபாட்டுவைரஸ் என்றும் விஞ்ஞானத் தமிழில் ஆசிரியர் விளக்கியுள்ளார். வேறும் பல இன வைரஸ் கிருமிகளிலிருந்து ஏற்படும் பல நோய்களுண்டு. அவையாவன தடிமன், காய்ச்சல், கூவைக் கட்டு, சின்னமுத்து, கொப்புளிப்பான், இளம்பிள்ளைவாதம் (Polio) விசர் நாய்க்கடி (Hydrophobia) இத்தியாதியன. இவைகளில் பல தடுப்பு மருந்துகளால் நோய் வரும் முன் காக்கலாம். சில வியாதிகள் தோன்றினுலும் உடம்பிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தி (Immune System) நோய் தொற்றுவதைத் தடுக்கவும், தொற்றிய கிருமிகளை அழிக்கவும் உதவுவதனுல் உடல் நலம் பெறுகிறது. ஆனல் இவைகளில் இரண்டு இன வைரஸ் மிகப் பயங்கரமானவை. ஒன்று மூளை, முள்ளந்தண்டு, நரம்புத் தொகுதி இவற்றைத் தாக்குவதினுல் உடன் மரணத்தை உண்டாக்கும் விசர் நாய்க்கடியை ஏற்படுத்தும் வைரஸ். மற்றது, எயிட்ஸ் வியாதியை உண்டாக்கும் H.I.V. வைரஸ். இந்த வைரஸ் மனித உடலில் பரவியதும் அங்குள்ள நோய் எதிர்ப்புச் சக்தியை அழித்து விடுகிறது. இதனுல் மரணம் ஏற்படுகிறது.

எயிட்ஸ் ஒரு பாலியல் நோயாகவே கருதப்படுகிறது. இவ்வைரஸ் கிருமி நோயுள்ள மனிதனின் இரத்தம், இந்திரியம், சிறுநீர், எச்சில், பெண்பால் உறுப்பிலிருந்து சுரக்கும் திரவம் ஆகியவைகளில் அதிகமாகக் காணப்பட்டாலும் அதிகமாக உடல் உறவின் போதே தொற்றிக் கொள்கிறது. அல்லாமலும் இரத்தப் பரிமாறலாலும் (Blood Trans fussion) இயற்கை மீறிய தன்னினச் சேர்க்கையாலும் இது தொற்றிக் கொள்ளும் காரங்களை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

இந்நூல் பொதுவாக எல்லோரும் படிக்க வேண்டியது. அதிலும் வெளிநாடுகளுக்கு செல்ல இருக்கும் நம் இளம் சந்ததியினர் தவருமல் படிக்க வேண்டிய தொன்று. இதனை ஆக்கித்தந்த டொக்ரர். எம். கே. முருகானந்தனுக்கு நன்றி பாராட்டுவதுடன் இன்னும் இது போன்று பல நூல்கள் வெளியிட வேண்டு மென்பது எம் பேரவா. O

## நூல்: தாயாகப்போகும் உங்களுக்கு

**'யதார்த்தா' வெளியீடு, பருத்தித்துறை**

**பக். 104 + viii விலை ரூபா: 30/-**

டொக்ரர் எம். கே. முருகானந்தனின் படைப்புகளில் மிகவும் பயன் தரும் சிறந்த நூல். ஒவ்வொரு பெண்களும்—முக்கியமாக தாயாகப்போகும் பெண்கள் கட்டாயமாக விரும்பிப் பாதுகாத்துப் படிக்க வேண்டியதோர் நூலாகும். ஒரு நாவல் அல்லது சிறுகதை படிப்பதுபோல் சுவையோடு இதைப் படிக்கும் அதே நேரத்தில் பரீட்சைக்குப் படிப்பது போல் கொஞ்சம் கொஞ்சமாகப் படித்து கிரகித்துப் பயன் பெறவேண்டிய நூலுமாகும்.

ஒவ்வொரு பெண்களுக்கும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் பயம், பீதியையும் நீக்குவதோடு, கரு உருவாகும்போது அவதானிக்கவேண்டிய முறை; கர்ப்பந்தான் என்பதனை எப்படி அறிந்து கொள்வது, பிறக்கப்போகும் குழந்தை ஆணு? அல்லது பெண்ணு? என்ற ஐயப்பாட்டிற்கு ஏற்ற விடை, கருத்தரித்த குழந்தை எப்போது பிறக்கும் என்பது பற்றிய பிரசவ அட்டவணை முதலியவற்றை இந்நூலில் "சில சந்தேகங்களும் எதிர்பார்ப்புகளும்" என்னும் தலையங்கத்தில் விளக்கியுள்ளார்.

அடுத்ததாக "உங்கள் ஆரோக்கியம்" என்ற தலைப்பில் வளரும் கர்ப்பத்தை எவ்வாறு பேண வேண்டும். அதற்காக தாயாரின் ஆரோக்கியம் எவ்வாறு பேணப்படவேண்டும் என்பதனை பொதுவான உடல்

(11ஆம் பக்கம் பார்க்க)

## அசைவும் அலைவும்

*என்னை அதிகம் கேட்காதீர்கள் !*
*வாழ்வு என்ருல் என்ன?*
*அதில் வைக்கும் பற்றுஎன்ன ?*

*சுழலும் உலகில்*
*தொங்கி நிற்கும்*
*உயிர்ப்பைத் தேடி*
*சிந்தனை விரிகிறது;*
*வயிரோ பசிக்கிறது!*
*தீனி எங்கே?*
*தீனி எங்கே?*

*வானம் முட்டம் போட்டிருக்கு!*
*எதிலும் ஊனம் தெரிகிறது;*
*உறுதியோ குலைகிறது.*

*இது என்ன?*
*வயிறு மீண்டும் பசிக்கிறது!*
*சிந்தனையோ பிழிகிறது!*

*பாடல் கேட்கிறது;*
*காது இரசிக்கப் பார்க்கிறது;*
*இதயமோ ஏங்கித் தவிக்கிறது;*

*உலகைப்பிழிந்து*
*வாழ்வைப் பரிசிட்ட*
*புத்தகம் மேசையில்*
*திறந்தபடி கிடக்கிறது!*
*மனம் எங்கே?*
*மனம் எங்கே?*

*நில்லா உலக ஓட்டத்தில்*
*ஒரு கணம் என்னை நிறுத்தி*
*அவள் கண்கள் பேசியது என்ன?*

*தேடலும் படைப்பும் அற்று*
*சமூகம் எதைநோக்கி*
*நடை போடுகிறது?*
*ஆடலும் பாடலும்*
*தொடர்பற்று இருக்கிறதே!*

*துன்புற்ற வேளை*
*உற்ற துணையாக*
*உதவும் நண்பன்*
*காலைவாரும்*
*நோக்கம் என்ன?*

*நான் மீண்டும்*
*உடுப்புப் போட்டு*
*செருப்பு மாட்டி*
*பள்ளிக்குச் செல்கிறேன்;*
*பிள்ளைகள் பார்த்திருக்கும்!*

*நத்தையும் ஆமையும் போல்*
*நாடும் வீடும் நம்வாழ்வும்*
*மெல்ல மெல்ல*
*உள்ளிழுத்தும்*
*உள்ளடங்கியும்*
*அசைகின்றன!*
*அலைகின்றன!*

— கந்தையா ஸ்ரீகணேசன் □

*போ.....*
*திரும்பிப்பார்த்து திரும்பிப்பார்த்து*
*சுவடுகளை விழுங்கியபடி*
*போ.....*

*இந்தப் பாலைவெளியில்*
*கால்கள் புதையும்*
*புயல்களும் வலுவுடன்வீசும்*

*கூடாரமடித்து உட்கார்ந்துவிடுகிற*
*தளைகளை அணிந்த கனவுகளைத்*
*தூரே வீசிவிட்டு*

*வெறுமையுற்ற கைகளுடனும்*
*மனத்துடனும்*
*போ......*

— மு. இ. அ. ஜபார் □

திசையின் சிறுகதை

# வம்சத்து வம்சம்

அல் அஸூமத்

நிச்சயம் நீங்கள் அச்சப் பட்டே ஆகவேண்டும்!

நீங்கள் ஒரு 'ஹோமோ' (தன்னினச் சேர்க்கையாளன்) வாக இல்லாவிட்டாலும், உங்கள் உடம்பில் 'எயிட்ஸ்' கிருமிகள் இல்லாவிட்டாலும், நீங்கள் அச்சப்படவே வேண்டும். அந்த அச்சம் என்பொருட்டல்ல. நான் 'எயிட்ஸ்காரணக' இருந்து இறந்தவன்! ஆவியான நான், உங்களை எதுவுமே செய்துவிட மாட்டேன். உங்கள் பிள்ளைகளோ உங்களுள் ஒருவரோ 'ஹோமோ' வாக மாறலாம். அதற்காகத் தான் நீங்கள் அச்சப்படவேண்டும் என்கிறேன்.

இதோ, நான் கதைக்கும் நீங்கள் ஒரு 'ஹோமோ' வாக இருந்தாலும், நிச்சயமாக நீங்கள் அச்சப்பட்டே ஆக வேண்டும். ஏனென்றால் நான் உங்களைக் கொல்லப் போகிறேன்! உங்களைப்போன்ற — என்னைப்போன்ற என்றாலும் சரிதான் — 'ஹோமோ'க்களைப் பழிவாங்கத்தான் நான் கடந்த ஒரு மாதமாகப் பேயாய் அலைகிறேன்.

நான் தற்கொலை செய்து ஒரு மாதம் இருக்கலாம். அதற்குரிய பலன் எனக்கு இப்போதே கிடைக்க ஆரம்பித்து விட்டது. அது வேறு கதை. நான் என்னை அவ்வளவு அவசரப்பட்டுக் கொன்றிருக்கத் தேவை இல்லைதான். மரணம் என்னை மிகவும் நெருங்கித்தான் இருந்தது. என்றாலும் என் நெஞ்சு என்னைச் சுட்டுவிட்டதே! நெஞ்சே சுட்டு விட்டபிறகு, மரணத்தை ஏன் எதிர்பார்த்துக் கோழைத்தனமாகக் கிடக்க வேண்டும்? கோழைமை—வீரம் என்பன பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட எனக்கு நேரம் இருக்கவில்லை. ஆஸ்பத்திரிக் கக்கூஸுக்குள் போனேன்; என் இடையில் எப்போதும் கிடந்த நூலைக் கழுத்தில் இறுக்கிக் கொண்டேன். மரண வேதனை இருந்ததெல்லாம் உண்மையா? ..... என் மனதுக்குள் மரணத்தைப் பற்றி நான் வைத்திருந்த நம்பிக்கை காரணமாக, அந்த வேதனை எனக்குத் தெரிந்திருக்கவில்லை போலும்!

என் நெஞ்சு என்னைச் சுட்டு விட்டதால்தான் நான் இப்படிக் கூடுவிட்டுக் கூடு பாய்ந்திருக்கிறேனே தவிர, 'ஹோமோ'க்களைப் பழிவாங்குவதற்காக அல்ல. பிறகு ஏற்பட்ட சபதம்தான் இந்தப் பழிவாங்கும் வெறி!

ஒரு 'ஹோமோ', மற்றைய 'ஹோமோ'க்களைப் பழிவாங்கப் புறப்பட்டுவிட்டேன்! சிரிப்பு வருகிறதா உங்களுக்கு? சிரித்துவிட்டுப் போங்களேன்! என் வரலாற்றைக் கேட்ட பிறகு சிரிப்பு வருகிறதா என்று பார்ப்போம்!

நீங்களும் ஒரு 'ஹோமோ' வா? அப்படியானால் உங்களை நான் கொன்றுவிடுவேன்! கையும் மெய்யுமாக உங்களை நான் பிடிக்கும் வரையில் வேண்டுமானால் தப்பி இருப்பீர்கள். வேறு ஏதோ காரணத்துக்காகச் சாவை விரும்பும் நீங்கள், 'நான் 'ஹோமோ' தான் என்று இப்போது பொய் கூறுவதில் பலனில்லை!

அல்லது மரணத்துக்கு அஞ்சி மறுத்துவிடப் போகிறீர்கள்! மறுங்களேன்! எவ்வளவு காலத்துக்கு? என்றாவது ஒருபொழுது என்னிடம் அகப்படத்தான் போகிறீர்கள்; சாகத்தான் போகிறீர்கள்! என்னை வெருளியாக நினைத்து மாட்டிக்கொள்ளாதீர்கள்!

ஆவி உளறுவதாகச் சமாதானப்பட்டுக் கொள்ள வேண்டாம். பல்லாயிரம் பல்லாயிரம் ஆண்டுகளாக அலைந்து திரியும் எத்தனையோ எத்தனையோ ஆவிகளுடனெல்லாம் கதைத்து விட்டவன் நான். அவற்றின் அனுபவங்களை எல்லாம் விஞ்ஞானகாலத்து நீங்கள் நம்பமாட்டீர்கள்! உங்கள் அனுபவம் உங்களை நெருங்கும்போது அவற்றை உணரக்கூட நீங்கள் உயிரோடிருக்க மாட்டீர்கள்!

மாரடைப்பு! புரிகிறதா உங்களுக்கு? புரியாத நோய்களுக்குரிய பெயர் இதுதான். ஆவிகளின் திட்டங்கள் இந்தப் பெயரில்தான் அரங்கேற்றப்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? இப்படித்தான் உங்களையும் நான் பழிவாங்கப் போகிறேன். புளிய மரத்துப்பேய், முனியாண்டிப் பேய், மோகினிப்பேய் என்றெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்களே!

என்னுடைய இந்த எச்சரிக்கையை நீங்கள் ஏற்று இன்றோடு திருந்திவிட்டீர்களானால், பிரச்சனையே இல்லை. ஆனாலும் ... 'ஹோமோ'ப் பேராசைக்காரன் அவ்வளவு எளிதில் சூனியமாகி விடுவானா?

குடிகாரன் திருந்துகிறான்; கூத்தியான் திருந்துகிறான்; திருடன்கூடத் திருந்துகிறான். 'ஹோமோ'? ... ... நான் திருந்தவில்லையே! ... ... நீங்கள் திருந்தப் போகிறீர்களா?... ... ...

எனக்குச் சிரிப்பு வருகிறது! ஏனென்றால் நான் உங்கள் கூற்றை நம்பக் கஷ்டமாக இருக்கிறது. உங்களுக்கு நேர காலம் கிடையாது; இடம்—சூழல் தெரியாது; சொத்தை—சூம்பல் புரியாது. பிறகெப்படித் திருந்துவது?

இந்த ஆவியுலகத்துக்குள் பிரசவமான பிறகுதான் அரிய பல ஞானங்களை நான் அடைந்து கொண்டிருக்கிறேன். அன்றைய அற்பங்கள், இன்றைய அற்புதங்கள். முன்னைய இருள்கள் இன்றைய தீட்சண்யங்கள். இந்த ஆவிகள்தான் குர்ஆனைப் பற்றிக் கூறுகிறார்கள்! உங்களுக்கு ஆச்சரியமாக இல்லை?......ம்! என்றோ நான் குடித்திருக்க வேண்டிய அமுத பானம்!

ப்ச்! ... ... வயிற்றையே இழந்த பிறகுதான் அமுதபானத்தையே பெறுகிறேன்!

மனித எருமையாய்ப் பூமிச் சாணத்தை நான் மேய்ந்து கொண்டிருந்த காலத்தில், இந்த மனித இலக்கணத்தைப் பற்றிய செய்தி ஓரளவு என் காதுகளில் விழுந்ததுதான். இந்த மனித இலக்கியங்களுடன் பழகியும் இருக்கிறேன். அப்படியிருந்தும் என் நரகமே என்னைத் தடுத்து வைத்திருந்தது!

இப்படி நரகம்—சொர்க்கம் என்பனபற்றியெல்லாம் நான் பேசும்போது நீங்கள் உங்கள் முகங்களையே அவலட்சணப்படுத்திக் கொண்டீர்களானால், நீங்களும் என்னோடு சேர்ந்தவராகத்தான் இருக்க முடியும்! ஏனென்றால் என்னை என்றோ திருத்தியிருக்க வேண்டிய பிரம்பு, அந்தக் குர்ஆன் பல்கலைக்கழகத்தில்தான் இருந்திருக்கிறது.

"அடப்பாவீ! அச்சொட்டாகக் கூறப்பட்டிருக்கிறதேடா உயிரோடிருந்த காலத்தில் இதைப்பற்றியெல்லாம் தெரிந்துகொள்ளாமலிருந்து விட்டா இன்று இப்படிப் போனாய்?..." என்று ஆவிகளே என்னைக் கிண்டல் செய்கின்றன! ஆவிகளின் புத்தியே கிண்டல் புத்திதான்! நானும் உட்படத்தான்!... இதே வினாவை அந்த ஆவிகளிடம் நான் கேட்டால் அவை என்ன சொல்லுமோ!.........

'ஹோமோ'க்களைக் கொன்றுவிடும்படி குர்ஆன் கூறுகிறதாமே?...... தறுதலைத்தனம் பிடித்த அப்படிப்பட்ட ஒரு சமூகத்தையே இறைவன் அழித்துவிட்டானாமே? ...... கொஞ்சம் புரட்டிப் பாருங்கள் சேக்ஸ், ஹறோல்ட், புஷ்பா தங்கத்துரைகளைக் கட்டாய லீவில் அனுப்பிவிட்டு இரகசியமாகவாவது கொஞ்சம் பார்த்தொலையுங்கள்! ஓ, அந்தப் பெயர்களை எப்படி நான் தெரிந்தேன் என்று கேட்கிறீர்களா?......

குர்ஆன் இறைவனின் மொழி என்று ஆவிகள் போற்றுகின்றன. ஆவிகள் பொய் சொல்வதில்லை. மற்றப்படி அது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். அது இறைமொழியானபடியால் தான், என்னை அது நாடவும் இல்லை; நான் அதை நாடவும் இல்லை! இந்த ஆவிகள் கூட எப்படி அதைத் தெரிந்து கொண்டனவோ! மனிதர்கள் ஓதும்போது கேட்டிருக்குமோ? ... நான் கூட இனி மேல் கேட்கலாம். அதனால் நானும் ஒருவேளை செத்தபிறகு, அதாவது இப்போதாவது பிராயச்சித்தம் தேடப் பார்க்கலாம்......

என் விமோசனம் இருக்கட்டும்; உங்கள் விமோசனம் எப்படி? நீங்கள் இதுவரையிலும் ஒரு 'ஹோமோ'தான் என்றால், இனிமேலாவது திருந்துவீர்களா?

என்னால் நம்புவதற்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது.

'அவன் திருந்த மாட்டான்; நோய்காவியாகவே மாறிவிடுவான்!' என்ற முடிவில்தானே அவனைக்கொன்றே போடும்படி குர்ஆன் கூறுகிறதாம்?... ...... அதனால்தான் நானும் அதன்பக்கமாகச் சேர்ந்து கொண்டேன்! ஜாக்கிரதை!

'எயிட்ஸ்' புதியதென்று நினைத்துக் கொண்டீர்களா? உங்களைப் போலத்தான் நானும் ஒரு முட்டாளாக இருந்தேன். இது கோடிக்காலத்து நச்சுப்பயிராம்! பாவம், இந்த ஆராய்ச்சியாளர்கள இனித்தான் மருந்து கண்டுபிடிக்கப் போகிறார்களாம்!




கழுத்தை நோக்கிக் கத்தியை வீசிவிட்டு இரத்தத்தை நிறுத்துவதற்காகத் துணியைத் தேடுகிறார்கள்!

நான் எப்படி 'ஹோமோ' ரோமியோ ஆனேன்? இட்ட வட்டம் இல்லை. ஆனால் சில சலனங்கள் புகைக்கோடுகளை இழுக்கின்றன. எது ஆரம்பமோ எனக்குத் தெரியாது.

நீங்களும் வயதுவந்தவர் தானே? எதுவாக இருக்கலாம் என்று பாருங்கள்.

எனக்குப் பக்கத்தில் என் பெற்றோர்கள் அசைகிறார்கள். இந்த அசைவுகளில்தான் என் பிற்காலத்தைய ஆசைகள் ஜனித்திருக்குமோ?

ஒரு பிஞ்சுத் தசையில் ஏற்றப்படும் 'நிக்கோட்டின்' புகையை அவர்கள் உணராதவர்களாக இருந்திருக்கலாம். நான் பிறந்து கிடந்ததற்காக அவர்கள் தங்கள் இல்லறப்பூட்டைத் தியாகம் செய்திருக்க வேண்டும் என்று நான் கூற வில்லை. என்றாலும் அவர்கள் சிறிதளவு கூச்சப்பட்டிருக்கலாம்.

பால்யகாலத்து நினைவுகளில், சில பாதைமிருகங்கள் தடதடவென்று ஓடுகின்றன. இந்த மிருகங்களோ என் பெற்றோர்களோ, என் 'ஹோமோ' த்தனங்களுக்குரிய தரிசு நிலங்களாக இருந்திருக்க முடியுமென்று நீங்கள் கருதுகிறீர்களா?

ஆறேழு வயதுகளில், என்னையொத்த தோழர்களுடன் தமாஷ் செய்ததாகவும் ஒரு நிழல் படிந்திருக்கிறது. ஆனால் இவ்வகை விஷயங்கள்கூட, பலரை 'ஹோமோ' வாக்க வில்லை என்று என் ஆவி நண்பர்கள் கூறுகிறார்கள்.

நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

அடுத்த—எதிர்த்த வீடுகளிலிருந்து புறப்பட்ட அண்ணமார்கள், மாமாமார்கள், தாத்தாமார்கள் என்றொரு பட்டாளமே எனக்குள் 'கருக்' கென்று நினைவு தொடுக்கிறார்கள்! அவர்களுடைய மேதாவித்தனங்கள் என் பெற்றோர்களின் கண்களைக் கட்டிவிடும்! அவர்கள் தந்த இனிப்புகளும் சில்லறைகளும் என் வாயைக் கட்டிவிடும். அந்தப் பட்டாளத்தின் உரசல்களும் உருவல்களும் ஊரடங்குச் சட்டங்களாக இருந்தன.

எதுவாக இருக்கலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

இவ்வாறாகத்தான் நான் வயதுக்கு வந்தேன். தனிக்காட்டு அராஜகமும் தொடர்ந்து கிடைத்தது.

குழந்தை அழுதால் சிரிக்கப் பழக்குகிறார்கள். முலைப்பாலை ஊட்டிய என் அம்மாவே, வெவ்வேறு பராக்குகளில் அப்பாலை மறக்கடிக்கவும் செய்தாள். இந்தச் சேர்க்கையைப் படித்துக் கொடுத்தவர்களோ, அதை வளர வைத்தார்களே தவிர மறக்கடிக்கப் போதிக்க வில்லை! பிறகெப்படி என்னால் மீளமுடியும்?

வித்தியாசமான ஆண்களுடன் என்னை முதன்முதலில் கண்டுகொண்டவர் அப்பா தான். என்ன செய்துவிட்டார் என்று நினைக்கிறீர்கள்? "டேய்" என்று கூச்சலிட்டார்! எழும்பி ஓடிவிட்டேன். அவ்வளவுதான்! இரண்டொரு நாள் என்னுடன் முகம் கொடுக்காமல் உலவினார். பிறகு சகஜமாகி விட்டார். ஒருவேளை அவரும் தம் சிறுவயதில் இப்படித்தானோ?

அவரே இரண்டாம்முறை கண்டபோது, இரண்டு தட்டுத் தட்டினார். மூன்றாம்முறை செம்மையாக உதைத்தார். அப்போது என் அம்மாவும்

(9ஆம் பக்கம் பார்க்க)

# வம்சத்து வம்சம்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூக்கைச் சிறிச்சிறி அழுதார். அடுத்தடுத்த முறைகள் வரும்போதெல்லாம் வீட்டுக்குள் 'ஷெல்' கள் அடிபட்டன. பிறகு பிறகு ஊர்ச்சந்திகள் கிசுகிசுக்கத் தொடங்கின. பரம சாதுவான என் அண்ணா, பிசாசுபோல் ஒருநாள் வீட்டுக்குள் வந்தான். என்னை, என் பரட்டைத் தலையால் இழுத்துக் கொண்டுபோய்க் குசினித் தூண் ஒன்றில் கட்டிவைத்து இரண்டு கண்களிலும் கொச்சிக்காய்த்தூள் தூவிக் கோப்பிக் கம்பை என் உடம்பிலேயே முறித்துப் போட்டுவிட்டு வெளியே போனான். அம்மாதான் அழுது, அவிழ்த்து, எண்ணெய் தடவிப் புலம்பினாள்.

ஒன்றுமறியாத நான் எப்படித் திருந்தியிருக்க முடியும்? ஒரு குற்றமும் நான் செய்திருக்கவில்லையே! அண்ணாமார், மாமாமார், தாத்தாமார்களை எல்லாம் இவர்கள் மிகவும் கனம் பண்ணுகிறவர்கள் ஆயிற்றே?......

அவர்களின் தண்டனைகளை நான் பெரிதுபடுத்தவேயில்லை. மற்றைய வீடுகளிலும் பிள்ளைகளை அடிக்கிறார்களே, இதற்குத்தானாக இருக்கவேண்டும்! அவர்கள் அலட்டியா கொள்கிறார்கள்? வீட்டுக்காரர்கள் கண்டித்தால் அதைப் பிள்ளைகள் பெரிது படுத்துவார்களா? ......

சரியான வழிமுறைகளை அவர்கள் அணுகவில்லை என்று இப்போதுதான் தெரிகிறது. 'யாரிடமிருந்து படித்தாய்?' என்று ஒரு வார்த்தை வினவியிருந்தால் சொல்லியிருப்பேன். அதிலிருந்து அவர்கள் பல பூகம்பங்களைச் சமாளித்திருக்கலாம்......

நீங்கள் அச்சப்பட்டே ஆகவேண்டும்! உங்கள் பிள்ளைகளைச் சுற்றி ஒரு கண்வேலி போட்டுக் கொள்ளுங்கள். வேலியில் எங்காவது பொத்தல் ஏற்பட்டதென்றால் உறுதியாகத் திருத்துங்கள். உங்களுடைய அறியாமையால் உங்கள் வம்சத்தையே துவம்சம் செய்துவிடாதீர்கள்.

''இவனால் நம்ம குடும்ப மானமே போகுது! சீ, இவன் புள்ளயா பிசாசா?' என்று என் அப்பாவைப்போல் கத்தாதீர்கள்.

''ஏண்டா இப்புடியெல்லாம் கெட்டுப்போறே?'' என்று என் அம்மாவைப்போல் ஒப்பாரி வைக்காதீர்கள்.

''சீ! அந்தப் பயலோட சேந்தா நம்ம புள்ளயும் கெட்டுக் குட்டிச்சுவராப் போயிறுவான்!'' என்று ஊரார் என்னைத் திட்டினார்கள்.

நீங்கள் ஒரு 'ஹோமோ' வா? ''தம்பீ! ......ஹி ஹி!... ...கொஞ்சம் வர்றியா இப்புடி?'' என்று இனிமேல் இளியாதீர்கள். கொன்று விடுவேன், கொன்று!

திருந்துவதைப் பற்றி நான் எந்தக் காலத்திலுமே எண்ணிப் பார்த்ததே கிடையாது.

நான் சென்றவிடமெல்லாம் சிலேட்டை இருந்தது. பாடசாலையில் நான் ஒரு சுதந்திர மிருகம். எனக்கென்று ஒரு வட்டமே இருந்தது. ஒரு வாத்தியார்கூட எனக்கென்று மாலைகளில் 'ரியூஷன்' வைக்கத் தொடங்கிவிட்டார்.

புகைந்த ஊர், எரியக் கனன்றது. அதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கின்றது! நான் ஏன் ஊருக்கே பிரதிநிதியைப் போல் சிரமிந்தேன்? அண்ணாமார், மாமாமார், தாத்தாமார், ரியூஷன் மாஸ்ரர், தோழர்மார் எல்லாரையுமே ஒதுக்கிவிட்டு என் தலையில் மட்டும் ஏன் பெட்ரோலை ஊற்றினார்கள்?

அவர்களைவிட நான்தான் அதிகம் ஊறிப்போனவன் போலத்தெரிகிறது! அல்லது எனக்கு எதுவிதமான போர் வையும் கிடைக்கவில்லை போலும்! திருந்த முடியாத 'ஹோமோ' வுக்குள்ள இலக்கணங்கள் எனக்குத்தான் பொருந்தியிருந்தனவோ? ......

நீங்கள் என்னைச் சந்தேகிக்க வேண்டாம். எனக்கு வழிகாட்டி வைத்த அந்த 'மூதாதை' களையும் நான் தேடிக்கொண்டுதான் திரிகிறேன். என்னிடம் அவர்கள் இன்னும் அகப்படவில்லை! ஒருவேளை அவர்கள் திருந்தி விட்டார்களோ?......திருந்தினாலும் பரவாயில்லை. அவர்களை நான் கொல்லாமல் விடப்போவதில்லை!......

அவர்களுள் சிலரை நான் அதிசீக்கிரமாகவே பழிவாங்க வேண்டும்! அந்தக் காலத்தில் என்னை வேறும் சிலரோடு கண்ட அவர்கள், தாங்கள் தாம் என் குருமார்கள் என்பதையும் மறந்து, என்னைப்பற்றி ஊர் முழுதுமே பறையடித்த அதி தூயவர்கள் அவர்கள்!

மிக மிக மிக மோசமான வயதுக்கு நான் வந்துவிட்டேன்! நியூமராலஜி வேடர்கள் கூட அந்த வயதைத்தான் குறிப்பொருள் ஆக்குகிறார்கள்! பதினேழு! நான் வீட்டைவிட்டே ஓடிப்போன வயது. அதுதான் என்னை மகாமோசமாக்கி இருக்க வேண்டும்.

சிறுவயதில் இப்படியாக வீட்டைவிட்டு 'ட்ருவலிங்' கிளம்பியவர்களுள் அநேகர், பிற்காலத்தில் பெரும்பெரும் புள்ளிகளாக மாறி இருக்கிறார்கள் என்று ஆவி நண்பர்கள் சத்தியம் செய்கிறார்கள். நான் என்னவானேன்? என்னையே ஒரு கரும்புள்ளியாக்கிக் கொண்டேன்!

வியாபாரம் தீர்ந்ததும் முதலாளி வீட்டுக்குப் பறக்கும் ஒரு சில்லறைக்கடை எனக்குப் புகலிடமாகக் கிடைத்தது. ஐந்து சிப்பந்திகளோடு நானும் ஆறாகச் சேர்ந்து விட்டேன்.

நாம் திருந்துவதற்குப் பல சந்தர்ப்பங்களை விதி தரத்தான் செய்கிறது — கெட்டுப்போவதற்குப் பலப்பல வாய்ப்புக்களைத் தருவதன் மூலம்.

கடையில் வாடிக்கிடந்த ஐந்து பேருமே, ஒருவருக்குத் தெரியாமல் ஒவ்வொருவராக எனக்குச் சக 'பாடி' ஆனார்கள்! அதுவரையில் மேற்போக்காக நான் அறிந்துவைத்திருந்த இந்தக்கலையை அந்துப்படியாக எனக்குப் பயிற்றித் தந்தார், ஐந்து பேர்களுள்ளும் வயதாகிப்போய்க் கிடந்த ஒருவர். நான் 'எயிட்ஸ்' காவியாக மாறியதற்கு அதிமுக்கிய காரணகர்த்தா இந்தப் 'பித்போக்கு' வாதி என்றுதான் நான் இப்போது தீர்மானித்திருக்கிறேன்.

ஆறு மாதங்கள் வரையில் நான் அந்தக் கடையில் அனுபவம் பெற்றபிறகு, தந்தையார் எப்படியோ என்னைக் கண்டுபிடித்து வீட்டுக்குக் கூட்டிப்போனார். அரையாண்டுப் பிரிவில் என்னைப் புதியவனாகவே என் வீட்டார் மதித்தார்கள், சிறியதொரு முதலீட்டால், அப்பா, எனக்கொரு சில்லறைக்கடை போட்டுத்தந்தார்.

வீட்டாரின் புத்திமதிகளும் இடைக்கிடை தலைநீட்டின. சாத்திரங்கள், சம்பிரதாயங்கள், கிரகதோஷ நீக்கங்கள் என்பனவும் நடைபெற்றன. பழைய குருடியின் கதைபோல் என் கதை ஆகக்கூடாது என்பதுதான் அவர்களின் ஆசை.

மரபுரீதியான சில கட்டுப்பாடுகள், நம் வாழ்க்கையுடன் பிணைந்து பண்பாடாகி விட்டிருக்கின்றன. இதன் காரணமாகச் சில உண்மைகளை வாய்விட்டு நம்மால் அலச முடியாமற் போகிறது. அலச முனையும்போது, பண்பாட்டுக்கே வெட்கம் வந்துவிடுகிறது! என் விஷயத்திலும் அப்படித்தான். விளக்கமான புத்திமதிகளைக் கூறவோ திருந்துவதற்குரிய அறிவுபூர்வமான வழிகளைச் சுட்டிக்காட்டவோ அவர்களால் முடியாமற் போய்விட்டது.

அவர்களை நான் இப்போது குற்றம் சொல்வதில் அர்த்தம் இல்லைதான்......

ஆனால், ''இது வெளியே தெரிந்தால் எல்லாருக்கும், வெட்கம்!'' என்ற ஆதங்கந்தான் அவர்களுடைய நடவடிக்கைகளிலிருந்து எனக்கு வெளிப்பட்டது. நானும் கவனமாக இருந்தேன், விஷயம் வெளியே தெரியாமல்!

என்னைப்போன்ற கட்டாக்காலிகள் கட்டுப்படுவதற்குக் கல்யாணம் ஒன்றேதான் ஒரே வழி என்ற ஐதீகம் நம்மிடையே நிலவும் பாவத்தால் என் பத்தொன்பதாவது வயதில் அந்த விபத்தும் நடந்து முடிந்தது.

ஐயோ!

கல்யாணம் சொர்க்க நிச்சயமாம். அந்தச் சொர்க்கமோ என்னை நரகத்துக்குத்தான் நியமித்தது. ஓர் 'எயிட்'ஸுக்கு மனைவியாதல் என்பது எவ்வளவு பாரதூரமான விஷயம் என்று நினைத்துப் பாருங்கள்!

இருதயம் உங்களுக்கு இருக்குமானால் உங்கள் உறுப்பையே நீங்கள் வெட்டிக் கொள்வீர்கள்!

உங்கள் மனைவி எப்படி?...... பாவம், அவளைக்கெடுத்துவிடாதீர்கள்! தற்பாதுகாப்பு செய்துகொள்ளுங்கள்! அகப்பட்டீர்களென்றால் பழிவாங்கிவிடுவேன், சகோதரமே!......

என் மனைவி குரூபி அல்லள். அடங்காப்பிடாரியும் அல்லள். நல்ல குடும்பப்பெண்தான். என் கொடுமைகளுக்கேற்றபடி வளைந்து வாழ்ந்தாள். எனினும் எங்கள் வாழ்க்கை, ரயில் பயணமாகவே இருந்தது. என் வெளியுலக இரகசிய வாழ்க்கை, என்றும்போல் ஆடம்பரமாகவே நடந்துகொண்டிருந்தது.

மலடி குழந்தை பெற்றது போல, என் மனைவியும் ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். குழந்தையிலோ குடும்பத்திலோ எனக்கு எந்தவிதமான ஈடுபாடும் இருக்கவில்லை. மாறாக உலகந்தான் வெறுத்துப்போய் இருந்தது.

மறுபடியும் வீட்டைவிட்டு நான் ஓடிப்போனேன். நான் ஓடிப்போனதற்குச் சரியான—வலுவான காரணம் எதுவும் இருந்ததாக எனக்குப் படவில்லை. ஏதோ ஒரு பூதம் என் பின்னால் இருந்து பிடரியைப் பிடித்துத் தள்ளிக்கொண்டிருந்தது என்றுதான் சொல்ல முடியும்.

எனக்கு வெறுத்துப்போன உலகத்தைக் குழிபறித்துப் புதைத்துவிட்டு, அதன்மேல் என் சாம்ராஜ்யத்தை நிலைநிறுத்திப் பத்து வருஷங்களாக நான் இஷ்டம்போல் அலைந்தேன். நீங்கள் 'ட்றகியூலா' ப்படம் பார்த்திருக்கிறீர்கள் தானே? அந்த 'ட்றகியூலா' வின் இடத்தில் 'எய்ட்' ஸை வைத்துப் பாருங்கள்; என்னையும் நினைத்துக்கொள்ளுங்கள்.

நீங்களும் ஒரு 'ஹோமோ' வாக இருந்தால் என்னை நினைத்துப் பார்க்கவேண்டியதில்லையே!......

ஒரு வெளிநாட்டு 'எயிட்' ஸைப்பிடித்துக் கொடுத்த கடற்கரை, என்னையும் காட்டிக் கொடுத்துவிட்டது. வெளிநாட்டுக்காரனை நான் அன்றைய சோதனையில் தோற்கடித்திருந்தேனாம்! இன்னும் ஓர் அரையாண்டுக்குள் நான் செத்துப் போகலாம் என்று கெடுவைத்தார்கள்.

இவர்களுடைய ஆராய்ச்சிகளோ சாவுக்கெடுவோ ஒரு பொருட்டாகப் படவில்லை. எனக்கு. ஒரு வாரகாலமாக அடைபட்டுக்கிடந்த உணர்வுதான் என்னைச் சித்திரவதை செய்தது. 'ஓடிப்போ! ஓடிப்போ!' என்று அந்தப் பூதம் என்னைத் தள்ளிக்கொண்டிருந்தது. 'சாகும் வரையிலாவது அனுபவி, அனுபவி!' என்று என்னைக் குடைந்தெடுத்து விட்டது! அங்கிருந்து தப்பியோடுவது எனக்குப் பெரிய காரியமாகவும் இருக்கவில்லை.

உலகமே எனக்கு அஞ்சியது என்பதைவிட, வானொலியும் தொலைக்காட்சியும் பத்திரிகைகளும் பொலீஸும் அச்சுறுத்தின என்பதுதான் பொருத்தமானது! மூன்று சிறுவர்கள் அந்தக் குறுகிய காலகட்டத்துக்குள் வைத்தியத்துக்குள் திணிக்கப்பட்டார்கள். நான்காவது 'பயல்' தான், என்னை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்த என் விதியை என் மீது படர விட்டான்!

அற்புதங்கள் என்று சொல்கிறார்களே, அப்படி ஏதாவது ஒன்று நடந்து, அந்த ட் டயல் என்னிலிருந்து தப்பியிருக்கலாம்; ஆனால், விதிக்கப்பட்டவற்றிலிருந்து நான் எப்படித் தப்பிக்க இயலும்? மனிதன் தனக்குத்தானே இட்டுக்கொண்ட சட்டங்களைவிட, விதி மனிதனுக்கு இட்டுள்ள சட்டங்கள் கொடியன!......

அந்தப் பாலகன் மூலமாகத்தான் நான் முதலும் கடைசியுமாகத் திருந்தினேன். அவனால்தான் நான் இன்று 'ஹோமோ' க்களைப் பழிவாங்கும் 'எயிட்ஸ்' ஆவியாகத் திரிகின்றேன். தற்கொலையைப் பற்றியே கனவுகண்டிராத சுயநலமியான நான், அந்தச் சிறு பல்கலைக்கழகத்தால்தான் தற்கொலையையும் செய்து கொண்டேன்.

மாலைக்கருக்கலில் தனிப்பாதையில் வந்த அந்தச் சிறு மயிலிடம் நான் இறகு கேட்டுக் கொண்டு நிற்கவில்லை .... நான் இறகு பிடுங்கிய அந்த மயிலின் பிருஷ்டத்தில் சிவப்புக்கோடொன்று எனக்காக என் விதியை எழுதி வடிந்தது. திரும்பிப்பார்த்தபோது, சட்ட விலங்குகள் எனக்காகத் திறந்து நின்றன.

பாலச்சந்தரின் 'புன்னகை' ஞாபகம் வருகிறது. நானும் ஆஸ்பத்திரியில்; அவனும் ஆஸ்பத்திரியில்,மறுபடியும் ஓடிவிட 'முடியாத பலத்த காவல் எனக்கு. என் கிருமிகள் இறங்கிய அவனைச் சுகப்படுத்தி விடுவார்களாம் . ..

ஆஸ்பத்திரிக்கு ஓடிவந்த அவனது குடும்பத்தவர்களைக் கண்டபோதுதான் என் குண்டலி குளிர்ந்து இறுகியது.

என் மனைவி!

''மகனே!'' என்று அலறுகிறாள்!......

என் பெற்றோர்கள்!...... .. அண்ணன்! ......அது?......அண்ணியோ? . ...

இனி உங்களுக்கு யோசிக்க நேரமில்லை.

எனக்குப் பிறந்தது பெண் குழந்தைதான். அதில் சந்தேகம் இல்லை.

என் மனைவி வேறு கல்யாணம் செய்து பெற்றெடுத்த பிள்ளையா?

இல்லை!

இனி என் குடும்பமே வைத்தியத்துக்குட்படப் போகிறது. என்றாலும் பயமில்லை. அவள் பெற்ற அந்தப் பயலுக்கு அவ்வளவு மோசம் இல்லையாமே! ......

பத்திரிகை, தொலைக்காட்சி மூலம் என்னை என் குடும்பம் முன்பே அறிந்துகொண்டுதான் சும்மா இருந்தது போலும்... ...

சம்பந்தமில்லாமல் உளறுகிறேனா?......

''தேவடியா மகனே!'' என்று மௌனத்தொண்டையில் உறுமினார் என் அப்பா. ''உன்னோட புள்ளடா! ஆறு வயசிலயே ஆம்புளயா மாறிப் போன நீ பெத்த புள்ளடா! ......''

நீங்கள் 'ஹோமோ' வாக இருப்பீர்களானால், உங்களை நான் ஏன் பழிவாங்கக் கூடாதென்று ஒரு காரணம் சொல்லுங்கள்? O

## உருளும் உலகில்

*14-1-89 'திசை'யின் 'உருளும் உலகில்' பகுதியில் வெளிவந்த கட்டுரைக்கு, ஒரு வாசகர் எழுதிய விமர்சனமும், 'சர்வதேசி'யின் பதிலும் இங்கு தரப்படுகின்றன.*

# யூதர்கள் ஒரு தேசிய இனமா? இஸ்ரேலை அமைக்க ஸ்ராலின் உதவியது வேடிக்கையா?

O யூதர்கள் ஒரு தேசிய இனமா?

O இஸ்ரவேல் யூதர்கள் தமது யூத அரசை ஏற்படுத்த ஸ்ராலின் தலைமையிலான சோவியத் யூனியன் உறுதுணையாக நின்றது வேடிக்கையானதா?

கிறீஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே யூதர்கள் தமது அரசை இஸ்ரவேலில் அமைத்து அதையே தமது தாயகமாகக் கொண்டு வாழ்ந்தனர். பின்பு வெவ்வேறு காலங்களில் இடம்பெற்ற ரோமர், துருக்கியர்களின் படையெடுப்புக்களால் ஐரோப்பிய நாடுகளுக்கு புலம் பெயரத் தொடங்கினர்.

இவர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் குறிப்பாக, 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் ரஷ்யா, போலந்திலும் தொடர்ந்து செக்கோஸ்லவாக்கியா, பிரான்சிலும் இன அழிப்புக்கும் படுகொலைகளுக்கும் இலக்கானார்கள். இந்த வரிசையில் யூதர்கள், அழிப்பின் உயர் வடிவமான பாசிச ஹிட்லரிடம் ஜேர்மனியில் 1933இல் 40 லட்சம் உயிர்களைப் பலி கொடுத்தனர். யூதர்கள் இவ்வாறாக இன அழிப்புக்கு உட்பட்ட போது முழு உலகத்தினதும் அனுதாபம் உலக யூதர்கள் மேல் ஏற்பட்டது.

அவ் வேளையில்தான், யூதர்கள் தமக்கென ஒரு யூத அரசை உடைய நாடு தேவை என்பதை உணர்ந்தனர். (இலங்கையில் தமிழர்களுக்கு ஏற்பட்ட உணர்வு போன்றது) தமது பூர்வீக தாயகமான இஸ்ரவேலுக்கே மீண்டும் சென்று வாழ முற்பட்டனர். இந்நிலையில் தான், அதுவும் 2 ஆம் உலக மகாயுத்தம் நடந்து கொண்டிருந்த கால கட்டத்தில்தான், ஸ்ராலின் தலைமையிலான சோவியத் யூனியன் இஸ்ரவேலின் ஒரு பகுதியில் மீண்டும் யூத அரசை அமைப்பதற்கு உறுதுணையாக நின்றார். (இதன் அர்த்தம் இஸ்ரவேலில் இடைப்பட்ட காலத்தில் குடியேறிய அரபுக்களுக்கு அம் மண்ணில் உரிமை இல்லை என அர்த்தமாகாது.)

உலகெங்கும் யூதர்கள் அடக்கப்பட்ட வேளையில் அடக்கப்பட்ட மக்கள் என்ற அடிப்படையில் இவ் யூதர்களுக்கு ஸ்ராலின் உறுதுணையானாரேயன்றி அடக்கப்பட்ட யூதர்கள் அடக்குமுறையாளராக மாறி இஸ்ரவேலின் அரபு பிரதேசங்களை ஆக்கிரமித்ததையோ பலஸ்தீனியர்களை அடிமைப்படுத்த முற்பட்டதையோ ஆதரித்தாரா? உண்மையாகவே உலக கம்யூனிஸ்ற்றுக்களும், முற்போக்கு சக்திகளும் சியோனிசத்தை எதிர்த்தே வருகின்றார்கள்.

இன்னும் விரிவாக நோக்கின், யூதர்கள் ஒரு தேசிய இனமா? என்பதை தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

தேசிய இனம் என்றால், பொதுப் பிரதேசம், பொது மொழி, பொதுப் பொருளாதாரம், உளவியல் உருவாக்கத்தை பிரதிபலிக்கின்ற பொதுக்கலாசாரம் ஆகிய நான்கு அம்சங்களையும் அடிப்படையாக கொண்ட வரலாற்று ரீதியில் உருவான நிலையான மக்கள் கூட்டமே ஆகும். உதாரணமாக-இலங்கையில் தமிழர்.

மானிடக்குழு என்றால் ஏதோ ஒரு வகை சிறப்பம்சத்தால் பொதுத்தன்மை கொண்டிருக்கும் மக்கள் கூட்டமே ஆகும். மொழிக்குழு, கலாசாரக் குழு என பல்வேறு வகைப்படும். உதாரணம்- மொழிக்குழு-தமிழர், ஆங்கிலேயர்.

கலாசாரகுழு-, இஸ்லாமியர், இந்துக்கள்.

இதனடிப்படையில் உலகில் வாழும் தமிழர்கள் மொழிக் குழு வகையினரே. ஆனால் இலங்கையில் வாழும் தமிழரை தேசிய இனம் என வரையறுக்கலாம். இதேபோலவே உலகில் வாழும் யூதர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் கலாசார குழு வகையினரே. ஆனால் இஸ்ரவேலில் வாழும் யூதர்கள் தேசிய இனத்தவரே, எவ்வாறெனில்,

உலகில் வாழும் யூதர்களுக்கென பொது மொழியோ, பொதுப் பிரதேசமோ, பொதுப் பொருளாதாரமோ கிடையாது. ஆனால் இஸ்ரவேலில் வாழும் யூதர்கள் தேசிய இனத்தவரே. இவர்களிற்கு மேற் கூறப்பட்ட நான்கு அம்சங்களும் உண்டு. முதலாவதாக, பொதுப்பிரதேசம்-- இஸ்ரவேல் என்பது யூதர்களின் பூர்வீக தாயகம். இந்த யூதர்கள் அந்நிய ஆக்கிரமிப்பால் ஐரோப்பிய நாடுகளுக்கு புலம் பெயர்ந்தமையால் இஸ்ரவேல் யூதர்களது தாயகம் அல்ல எனக்கூற முடியுமா? உதாரணமாக சிங்கள பேரினவாதிகளின் பயங்கரவாதத்தால் தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளிற்கு புலம்பெயர்ந்துள்ளார்கள், இவர்கள் என்றோ ஒரு நாள் (அதுவும் அங்கு புதிதாக தோன்றிய பயங்கரவாதத்தால்) தமது பூர்வீக தாயகம் திரும்ப முற்பட்டால் 'இது உங்கள் தாயகம் அல்ல என யாராவது கூறமுடியுமா? இது மட்டுமல்ல, இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆங்கிலேயரால் அடிமைகளாகக் கொண்டுவரப்பட்ட இந்திய தமிழர்களுக்கு இன்று மலையக மண் சொந்தம் என கூறும் அதேவேளை அவர்கள் விரும்பி தமது பூர்வீக தாயகம் செல்ல முற்பட்டால் 'இந்தியா உங்கள் பூர்வீக தாயகம் அல்ல' என கூறிவிட முடியுமா? எது எவ்வாறாயினும் யூதர்களுக்கு இஸ்ரேல் தாயகம் என்பதை ஏற்றுக்கொண்டால் இஸ்ரவேல் யூதர்களுக்கு பொதுப் பிரதேசம் என்பது வெளிப்படையானது.

இரண்டாவதாக, இஸ்ரவேலில் வாழும் யூதர்களுக்கு பொது மொழி உண்டு. யூதர்களின் தாய் மொழியான 'ஹீப்ரு' இன்று அவர்களால் மறக்கப்பட்டு வருகின்ற போதிலும் யூதர்கள் இஸ்ரவேலில் பேசுகின்ற ஆங்கில மொழியையே பொது மொழியாக கொள்ளலாம், தாய் மொழி மறக்கப்பட்டதால் பொது மொழி இல்லை எனக் கூறமுடியாது. உதாரணமாக, இலங்கையில் முஸ்லிம்கள் தமது தாய் மொழியான அரபை மறந்து தமிழ் மொழியையே தமது பொது மொழியாக கொள்ளவில்லையா? அல்லது அமெரிக்காவில், பல்வேறு நாடுகளில் இருந்து பல்மொழி பேசுவோர் வந்து குடியேறி இப்போது ஆங்கில மொழியை தமது பொது மொழியாகக் கொண்டிருக்கவில்லையா?

மூன்றாவதாக, பொதுப் பொருளாதாரம் இஸ்ரவேலில் வாழும் யீதர்களுக்கு இல்லை என எப்படிக் கூறமுடியும்? இது ஒரு சர்ச்சைக்குரிய விடயம் அன்று. ஏனெனில் இலங்கை லமது கருத்தை மாற்றிக் கொண்டு விட்டனர். இது பொதுப் பொருளாதாரத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதில் உள்ள தவறேயன்றி வேறல்ல.

நான்காவதாக, இஸ்ரவேலில் யூதர்களுக்கு பொதுக்கலாசாரம் என்பது பொதுவாக யாராவது அங்கீகரிக்கப்படக்கூடிய தொன்றாகும். இதுவே அவர்களின் பிரதான அம்சமும் ஆகும்.

ஆகவே இஸ்ரவேலில் யூதர்கள் ஒரு தேசிய இனத்தவரே. அவ்வாறாயின் ரஷ்யாவில் யூதர்கள் ஒரு தேசிய இனத்தவரா? (ஸ்ராலின் 'இல்லை' எனவே கூறியுள்ளார்) ஏனெனில் ரஷ்யாவில் வாழ்ந்த யூதர்கள் தமக்கென ஒரு பொது மொழியைக் கொண்டிருக்கவில்லை. தாம் வாழ்ந்த அந்தந்தப் பகுதிகளில் வழக்கத்தில் இருந்த மொழியையே பேசிவந்தனர். (உ+ம் சோர்ஜியாவில்-சோர்ஜிய மொழி) பொது மொழி எனும் அம்சத்தை கொண்டிராததால் இவர்கள் தேசிய சிறுபான்மை இனத்தவரே.

தேசிய சிறுபான்மை இனம் என்றால், தேசிய இனத்துக்கான நான்கு அம்சங்களில் ஒன்று அல்லது அதற்கு கூடிய அம்சங்களைக் ஓர் இனம் கொண்டிருக்காவிடில், அது தேசிய சிறுபான்மை இனம் ஆகும்.

ஆகவே, உலகில் வாழும் யூதர்கள் ஒரு மானிடக்குழு வகையினரே, இஸ்ரவேலில் வாழும் யூதர்கள் தேசிய இனத்தவரே, சோவியத் யூனியனில் வாழும் யூதர்கள் தேசிய சிறுபான்மை இனத்தவரே, ஆகும். ஆனால் நாம் மேலெழுந்தவாரியாக யூதர்கள் தேசிய இனம் அல்ல; அல்லது தேசிய இனம் என குறிப்பிடுவது தான் தவறானது ஆகும்.

மொத்தமாக, யூதர்களையும், அவர்களது வரலாற்றுப் போக்கையும், தத்துவார்த்த ரீதியில் தேசிய இனத்தன்மையையும் பகுத்து புரிந்து கொண்டால் நாம் தவறான முடிவுகளுக்குச் செல்ல மாட்டோம். மேலும், ஐரோப்பியர்கள்-இஸ்ரவேல் யூதர்கள்-பாலஸ்தீனர்கள் -ஸ்ராலின் ஆகியோரது தன்மையை சுருக்கமாக விளங்கிக் கொள்ளக் கூறப்படும் ஒரு குறுங்கதையையும் நோக்குவோம்.

'ஒரு எஜமான் ஒரு அடிமையை மிகவும் கொடுமைப் படுத்தி வந்தான். இதைக் கண்ணுற்ற ஒரு மனிதாபிமானி அவ் அடிமைமேல் இரக்கம் கொண்டு அவனை விடுவித்தான். அத்தோடு அவனுக்கு பண உதவியும் அளித்து 'சுதந்திரமாக உழைத்து வாழ்' என கூறி அனுப்பினான். ஆனால் அந்த விடுபட்ட 'அடிமை'யோ அந்தப் பணத்துக்கு ஓர் அடிமையை வாங்கி அவனைக் கொடுமைப்படுத்தி தன்னை வளம் படுத்திக் கொண்டிருந்தான்'.

இங்கே நாம் கவனிக்க வேண்டியது, மனிதாபிமானியின் செயற்பாடு வேடிக்கையானதா? அல்லது விடுவிக்கப்பட்ட அந்த அடிமையின் செயற்பாடு வேடிக்கையானதா?

ஆம்! பாசிசத்தால் அடக்கப்பட்ட யூதர்கள் இன்று சியோனிச அடக்கு முறைக்கும்பலாக மாறியதே வேடிக்கையானது.

— வ. நடராஜன் O

**யூ**தர்களின் தாயகம், யூதர்கள் ஒரு தேசிய இனம், ஸ்டாலினின் மனிதாபிமானம், என்னும் விடயங்களே நீங்கள் எழுப்பிய பிரச்சினைகளின் சாராம்சம் ஆகும். இம்மூன்று அம்சங்களுக்கும் அடிப்படை விளக்கங்களைக் காண முற்படுவோம்.

இன்று இஸ்ரவேலில் வாழுகின்ற மொத்த யூதர்களில் 87 விதத்தினர் ஐரோப்பாவில் இருந்து குடியேறியவர்களாகவும், 13 வீதத்தினரேபலஸ்தீனத்தில் (இஸ்ரவேலில்) தொடர்ந்து வாழ்ந்துவரும் பாரம்பரிய யூதர்களுமாவர். இந்த 13 வீத யூதர்கள்பற்றி பலஸ்தீன அராபியர்கள் பிரச்சினை எழுப்பவில்லை. ஆனால் குடியேறிய 87வீதத்தினர் பற்றியே அராபியர்கள் பிரச்சினை எழுப்பினர்.

இனி விவாதத்துக்கு வருவோம். இன்று அமெரிக்காவில் வாழும் அமெரிக்கர்கள் முன்பு தாம் பிரித்தானியாவில் வாழ்ந்தவர்கள் என்பதற்காக இன்று பிரித்தானியாவில் பெருந்தொகையாகக் குடியேறமுயன்றால், அதனைப் பிரித்தானியா அங்கீகரிக்குமா? அல்லது மேற்காசியாவிலிருந்து இந்தியாவுக்குள் பிரவேசித்த இஸ்லாமியர்களை பாகிஸ்தானிய இஸ்லாமியர்கள் மீண்டும் மேற்காசியாவுக்குச் சென்று குடியேறுமாறு ஏதாவது ஒரு மேற்காசிய நாடு ஏற்றுக்கொள்ளுமா? அல்லது இவற்றை விடவும் ஒரு சுவாரசியமான உதாரணத்தைக்கூட காட்டலாம். இந்தியாவில் பிறந்த சல்மான் ருஷ்டி இன்று ஓர் பிரித்தானியப் பிரஜை. அவர்பற்றிய விவகாரங்களை இந்திய அரசு கையாளாது பிரித்தானியப் பிரஜை என்ற வகையில் பிரித்தானிய அரசே கையாள்கிறது. இதன் மூலம் இவர் ஒரு பிரித்தானியனாகவே இருக்கிறாரே தவிர இந்தியராக அல்ல என்பது பெறப்படுகிறது. இம்மூன்று உதாரணங்களில் இருந்தும் நாம் என்ன முடிவுக்கு வருகிறோம்? குறிப்பிட்ட 87 வீத யூதர்களினதும் தாயகம் அவர்கள் வாழ்ந்த ஐரோப்பாவே என்றும், அதனால் அவர்கள் ஐரோப்பியர்களே அன்றி பலஸ்தீனரோ இஸ்ரவேலியர்களோ அல்ல என்பதும் அல்லவா?

அடுத்து யூதர்கள் ஒரு தேசிய இனம்தான் என்று நீங்கள் குறிப்பிடுவது உங்கள் குழப்பத்தையே காட்டுகிறது.

(11ஆம் பக்கம் பார்க்க)

## டொக்ரர் எம். கே...

(ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆரோக்கியம் என்ற நிலையில் விளக்கியுள்ளார். இதில் வலியுறுத்துவதாவது: 1. தாயாகப் போபவரின் எடை (weight) (2) இரத்த அழுத்தம் (Blood pressu e) (3) சிறுநீர் ஆய்வில் சீனிச்சத்து, புரதம் (Sugar & Albumim) இருப்பதனை அவதானித்தல் (4) இரத்த வகை (Blood group) (5) தல்லிரத்த அளவு (Haemoglobin level) இவற்றை ஒரு குடும்ப டொக்ரரிடமோ அல்லது அது சார்ந்த கிளினிக்கிலோ அறிந்து கொள்வது.

அடுத்தாக ஒரு கர்ப்பிணிக்கு போதியளவு உணவு கொடுக்காமல் விடுவதும், மிதமிஞ்சிய உணவைக் கொடுப்பதும் பாதிப்பை உண்டுபண்ணுமாகையால், அளவான, சத்தான உணவு மிக முக்கியம். பால், முட்டை, காய் கறி வகைகள் கீரை வகைகள், பருப்புவகைகள் மீன், இறைச்சி, நெத்தலிக் கருவாடு போன்றவைகள் முக்கியமானவை. பழவகைகள் பழரச வகைகள் கொடுக்கலாம். கொதித்து ஆறிய நீர் மிகவும் முக்கியமானது.

கர்ப்பிணி ஒரு வேலையும் செய்யக்கூடாதென்று ஒரு இடத்தில் படுத்திருப்பது கூடாது உடற் பயிற்சியும் தேவை ஓய்வும் தேவை. உடலைச் சுத்தமாக வைத்திருப்பதற்கும் நோய்க்கிருமிகள் தாக்காவண்ணம் பாதுகாக்கவும் ஒவ்வொரு நாளும் தலை கழுவிக் குளிப்பதோ உடலைக் கழுவுவதோ அவசியம்.

மேலும் கர்பமான காலத்தில் இறுக்க உடை அணிவதும், நீண்டதூரம் ஒரே நிலையில் நின்று பிரயாணம் செய்வதும் தவிர்க்கப்பட வேண்டும் என ஆசிரியர் கட்டுகிறார்.

இப்படிச் சுவையாகவும் நுணுக்கமாகவும் ஒவ்வொன்றையும் விளக்கும் இந்நூலாசிரியர், மேலும் கர்ப்பந்தரித்த ஆரம்பகாலத்தில் ஏற்படும் வாந்தி, பிரட்டல் தீர்வு பற்றியும், அடுத்து ஒவ்வொரு பெண்ணும் தனது இரத்தப்பிரிவை (Blood group) தெரிந்து வைத்திருப்பதன் அவசியம் பற்றியும், பின்னர் குழந்தை பிறந்ததன் பிறகு அதைப் பாதுகாத்தல், அத்தோடு அக்காலத்தில் தாய்க்குரிய பத்தியம் என்பது சரக்கு அரைப்பதும் வயிற்றுப்புண்ணை ஆற்றவென்று சாராயம், பிறண்டி கொடுப்பதும் அல்லவென்றும் கூறும் ஆசிரியர், உண்மையான பத்தியம் என்பது கொதித்து ஆறிய நீர், பழச்சாறு, இளநீர், பால் மற்றும் சத்துள்ள சாதாரண உணவுவகை என்று விளக்குவதும் நமது பாட்டி பரம்பரை மூடத்தனமான "கை வைத்திய"ங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கிறது.

இறுதியாக குடும்பக்கட்டுப்பாட்டு முறையும் சொல்லப்படுகிறது. இரு குழந்தைகளுக்குமுள்ள இடைவெளி, தற்காலிகக்கட்டுப்பாட்டு முறைகளும் நிரந்தரக் கட்டுப்பாட்டுக்குமான வழிமுறைகளும் நன்கு சொல்லப்படுகிறது. எனவே மொத்தத்தில் இந்நூல், கணவன் மனைவி இருவரும் படித்துப் பயன்பெற வேண்டியதாகும். இதனல் ஓர் திட்டமிட்ட, ஆரோக்கியமான குடும்ப வாழ்வை அமைக்க இலட்சிய நோக்கோடு இந்நூலை எழுதித்தந்த இதன் ஆசிரியர் டொக்டர் முருகானந்தனை எவ்வளவு தூரம் பாராட்டினலும் தகும்.

திருமதி சந்திரகௌரி சிவகுமார் O

## யூதர்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

13 வீத யூதர்கள் வேறு; குடியேறிய 87வீத யூதர்கள் வேறு. இந்த 87 வீதத்தினரும் ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தவர்கள். ஸ்ராலின் இந்த 87வீத யூதர்களையும் 13வீத யூதர்களுடன் சேர்த்து ஒரு தேசிய இனமாக அங்கீகரித்த காலத்தே இவர்கள் ஒரு பொது மொழியைக் கொண்டிராமல் பல்வேறு மொழிகளையே கொண்டிருந்தனர். அவ்வாறே பொதுப் பொருளாதாரம் என்ற அம்சமும் அவர்களுக்கு இருக்கவில்லை. நீங்கள் வரையறுத்துள்ள'மொழிக்குழு கலாசாரக் குழு" என்ற வாதங்களின் படி பார்த்தாலும் இவர்கள் ஒரு கலாசாரக் குழுவினர் மட்டுமேயன்றி தேசிய இனத்தவர்கள் என்பதில்லை! பரம்பரையாய் அங்கு வாழ்ந்த 13 வீத யூதர்களை மட்டும் தேசிய இனம் என்ற எல்லைக்குள் அடங்குவர், இந்தப் 13 வீதத்தினருடன், வந்து குடியேறிய 97வீத யூதர்களையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக ஒரு தேசிய இனம் என ஸ்ராலின் அங்கீகரித்தமை தவறுனதே.

இனி பொது மொழி பற்றிய பிரச்சினைக்கு வருவோம். ஆங்கில மொழி யூதர்களின் பொது மொழியாய் இருப்பதாய் கூறுகிறீர்கள். இது இன்றைய இஸ்ரவேலுக்கு பொருந்துவதே அன்றி ஸ்ராலின் இஸ்ரவேலை அங்கீகரித்த காலத்துக்கு அல்ல, இஸ்ரவேலிய அரசு ஸதாபிக்கப்பட்ட போது பொது மொழிக் கோட்பாட்டுத் திட்டத்தை அது முன் வைத்து ஹீப்ரு, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் யூதர்கள் 25 வருட காலத்துக்குள் பொது மொழிகளாகக் கற்றுத்தேற வேண்டும் என்பதே அத்திட்டமாகும். இதனலேயேதான் இன்று அவ்விரு மொழிகளும் பொது மொழிகளாக இஸ்ரவேலில் வழங்கி வருகின்றன. எனவே உங்கள் பொதுமொழியற்றிய கூற்றும், அதனல் யூதர்கள் ஒரு ப்தசிய இனம்தான் என்பதே காலமுரணைக் கருத்தில் கொள்ளாதவையாகும். எனவே. ஸ்ராலின் அங்கீகாரம் வழங்கியபோது ஒரு பொது மொழி யூதர்களுக்கு இருக்கவில்லை என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

அடுத்து ஸ்ராலினின் மனிதாபிமானத்திற்கு வருவோம். ஐரோப்பாவில் யூதர்கள் அவஸ்தைப்பட்டபோது, ஆபிரிக்காவில் உகண்டாவை அண்டிய ஒரு பிரதேசத்தில் யூதர்களைக் குடியேற்றுவதன் மூலம், ஒரு யூத அரசை நிர்மாணிக்க ஐரோப்பியர் பரிசிலித்தபோது, ஆபிரிக்கர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்நிலையில் யூதர்களும் அதை அனுசரிக்கவில்லை. இந்த இக்கட்டான வேளையில் பெரும் நிலப்பரப்பைக் கொண்ட ரஷ்யாவில் ஒரு பிரதேசத்தில் யூதர்களுக்கான குடியேற்றத்தை நிறுவி, யூதர்களின் அரசை நிர்மாணித்து அங்கீகரிக்க, ஸ்ராலின் முனைந்திருக்கலாமே? மாற்ருன் தலையில் திணிப்பதை அங்கீகரிப்பதை விட, மனமுவந்து தாம் அதைச் செய்வதல்லவா மனிதாபிமானத்துக்கு அழகு! ரஷ்யாவில் வாழ்ந்த தேசிய சிறுபான்மை இனமான யூதர்களுடன் இவர்களையும் குடியேற்றி இருக்கலாமே? அது வல்லவோ முன்னுதாரணம்? அப்படிச் செய்திருந்தால் ஸ்ராலின் ஒரு மாபெரும் மனிதாபிமானி எனப் போற்றப்பட்டிருப்பாரே!

ஆனல், இஸ்ரவேலை த்தான் ஏன் அங்கீகரித்தார் என்பதற்கு ஸ்ராலினே கூறிய காரணம்தான் மிகவும் விசித்திரமானதும், வேடிக்கையானதுமாகும். நவீனகல்வியறிவு, விஞ்ஞானம், தொழில்நுட்பம், நவீன அரசியல் சிந்தனைகள் அற்ற பழைய இனக்குழுத்தன்மை வாய்ந்த அராபியர்கள் மத்தியில், மேற்கூறிய நவீனத்துவம் அனைத்தும் நிரம்பிய ஐரோப்பிய யூதர்கள் சென்று குடியேறுவதன் மூலம் மத்திய கிழக்கு நாடுகள் நவீன மயமாகும் என்பதே ஸ்ராலின் அளித்த விளக்கமாகும்.

இதுமிக விநித்திரமானது. தேசிய இனம்பற்றி தமது கோட்பாடுகளுக்கு அமைய இஸ்ரவேலிய யூதஅரசின் நிர்மாணம் இல்லாது போனதற்கு, அவர்தேடிய—வலிந்து அளித்த விளக்கமே இதுவாகும். ஒரு சாக்குப் போக்கான, பொருந்தா விளக்கம் அளித்த ஸ்ராலின் அதற்கு ஒரு பெயரைச் சூட்டினுர். Catalyst Theory— என்ற நொதியக் கோட்பாடே அதுவாகும்.

ஸ்ராலின் கூறிய இந்த விளக்கங்களுக்கு நேரெதிர்மாறுன விளைவுகளே அங்கு நிகழ்ந்தமை, இதில் இன்னும் விசித்திரமானது. நவீன சிந்தனை, தொழில் நுட்ப அறிவு இவற்றையல்லாமல், ஐரோப்பாவில் தாம் ஒடுக்குமுறைக்கு உள்ளான அநுபவங்களை, எப்படி பன்மடங்கு குரூரத்துடன் பலஸ்தீனிய அராபியர்கள் கையாளலாம் என்பதைத்தான், யூதர்கள் கடைப்பிடித்தார்கள். ஒடுக்குமுறையின் உச்சத்தை வட்டியும் முதலுமாகச் சேர்த்து வழங்கியதே, ஐரோப்பாவில் இருந்து அவர்கள் பெற்ற அறிவின் அழகாயிருந்தது. மேலும் சொன்னல், அராபிய தேசத்தவரின் நவீன தொழில் நுட்ப வளர்ச்சியைத் தடுக்கவே, இவர்கள் முற்பட்டார்கள். ஈராக்கின் ஆக்கசக்திக்கான அணுஉலைகளைக் குண்டிவீசித் தகர்த்தமை, இதற்கு உதாரணம். 'நொதியக் கோட்பாடு' இங்கு நொய்மையானது ஏன்?

இங்கே எனது கட்டுரைக்கு எழுத்து விமர்சனங்களைத்தான் வரவேற்கிறேன். நவீன சிந்தனையற்று தேக்கமுற்ற போக்கை நொதிக்கப்பண்ணி, மாற்றங்களை நிகழ்த்த இது போன்ற விமர்சனங்கள் பங்களிப்புச் செய்யும். இந்தப் பங்களிப்புக்கு தவிய உங்கள் விமர்சனப் பார்வைக்கு நன்றி கூறுவது, நமது சிந்தனை உலகுக்கு நலம் சேர்க்குமல்லவா?

- சர்வதேசி

## நிகழ்வுகள்

### 22-3-89 புதன்

எச்சரிக்கை ஒன்றைத் தொடர்ந்து யாழ். ஆஸ்பத்திரியில் கடமை புரியும் இலங்கைப் பொலிசார் இன்று சீருடையணிவதைக் கைவிட்டனர் □ தென்பகுதியில் ஜே.வி.பி.யினர் ஹர்த்தாலை நடாத்தினர். ஜே. வி. பியைச் சேர்ந்த மூன்று பேர் தலைநகருக் கண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டனர் □ விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாகத் தடையால் யாழ்ப்பாணத்திலுள்ள வங்கிகளும். அரசாங்க செயலகமும் இயங்கவில்லை □ மாலை புங்கங்குளம் ரயில் நிலையத்திற்கருகில் பாடசாலை மாணவரொருவர் சுட்டுக்கொல்லப்பட்டார் □ நாடாளுமன்றத்தில் கேகாலை மாவட்ட உறுப்பினரான அத்தாவுட செனிவிரத்ன பேசுகையில் 'இனப் பிரச்சினையுடன் விளையாடியது போதும். இனியும் விளையாட முற்பட்டால் நாசம்தான் ஏற்படும். இப்பிரச்சினைக்கு விரிவான தீர்வை மேற்கொள்ளுங்கள்' என்ருர் □ ஆனைக்கோட்டை கொக்குவில் ஆகிய பகுதிகளில் 9 வீடுகளில் கொள்ளை நடைபெற்றது □

### 23-3-89 வியாழன்

முல்லைத்தீவுக் காட்டுப் பகுதியில் இந்தியப்படையினரின் தாக்குதல் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன □ மாத்தளையில் ஜே. வி. பியினர் ஹர்த்தால் அனுஷ்டித்தனர் □ திருகோணமலைக்கும் புல்மோட்டைக்கும் இடையில் மீண்டும் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டது □ வடமத்திய மாகாணத்தில் இடம் பெற்ற கொலைகளை விசாரிக்க ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டுமென சிறிமா நாடாளுமன்றத்தில் வற்புறுத்தினுர் □ உடப்பு தமிழ் வித்தியாலயத்துக்குப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டு மென்று அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது □ மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென மத்திய மாகாண சபை உறுப்பினர் பி. வி. கந்தையா கூறினுர் □ யாழ். பல்கலைக்கழகப் பின் பகுதிகள் இந்தியப் படையால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன □ வல்வெட்டியில் படையினரின் ஜீப் வண்டி மீது தாக்குதல் நிகழ்ந்தது □

### 24-3-89 வெள்ளி

மக்கள் தொண்டர் படையில் சேரவருமாறு இந்தியப் படையின் யாழ். நகரக் கொமாண்டர் இளைஞர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் □ அரியாலை மாம்பழம் சந்திக்கருகில் ஒரு இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார்; படையினரைக் கண்டு பயத்தினுல் ஓடமுற்பட்டபோது சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது □ பளைப்பகுதியில் இந்தியப்படையினர் கடும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அதிகாலையில் இரண்டு மணிநேரமாக மோதல் சம்பவங்கள் இடம் பெற்றன □ இணுவிலில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இராணுவ வண்டி ஒன்று பலத்த சேதமுற்றது □ வட - கிழக்கு மாகாண சபைக்குள்ள பிரச்சினைகளையே இந்தியப் பிரதமரிடம் கூறினேன். இதில் என்ன தவறிருக்கிறதென மாகாணசபை முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் புதுடில்லியில் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார் □ நகைச்சுவை எழுத்தாளர் குமார் தனபால் சுட்டுக்கொல்லப்பட்டார் □

### 25-3-89 சனி

சமசமாஜக் கட்சியும், நவ சமசமாஜக் கட்சியும் ஒன்றிணைந்து செயற்பட முடிவு செய்துள்ளன □ குமுழமுனைப் பகுதியில் 76 வீடுகள் முற்ருகத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும், ஹெலிகொப்டர்கள் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும், அப்பகுதி மக்கள் அகதிகளாக வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர் என்றும் அப்பகுதிக்குச் சென்று வந்த ஈரோஸ் நாடாளுமன்றக்குழு தெரிவித்தது □ ஆனைக்கோட்டைச் சந்தியில் இரு இளைஞர்களின் சடலங்கள் சூட்டுக் காயங்களுடன் கிடந்தன □ நெல்லியடிப் பகுதியில் கிரனேற் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது □ பளைப் பகுதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது □ அமைதிப் படையினரின் 'ஒப்பரேஷன் பாஸ்' நெடுங்கேணிக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது □ மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா நடைபெற்றது □

### 26-3-89 ஞாயிறு

அரியாலையில் 39 வயதுப் பெண்மணி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் □ யாழ். நாவலர் வீதியில் ரெயில்வேக் கடவைக்கு அருகில் இளைஞர் ஒருவரின் சடலம் காணப்பட்டது □ சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பிரிட்டனிலுள்ள பழைய மாணவர்கள் 36 ஆயிரம் ரூபாவை கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்துள்ளனர் □ கொழும்பிலிருந்து யாழ். வந்த தனியார் பஸ் பயணிகள் பூவோயா பாலத்திற்கு அண்மையில் கொள்ளையரின் கைவரிசைக்கு ஆளானுர்கள். சில பயணிகள் சவரக்கத்தியால் காயப்படுத்தப்பட்டார்கள் □

### 27-3-89 திங்கள்

பளைப்பகுதியில் நடந்த தேடுதல் நடவடிக்கையின் போது இளைஞர் ஒருவர் சயனைட் அருந்தி மரணமானுர் □ தமிழ் மக்களுக்கு தனியான உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு கல்முனையில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடந்தது □ வத்தளை நீதிமன்றத்தில் தீவிரவாதிகள் குண்டு வீசிய பின்னர், 7 கைதிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

திசை
THISAI

## தேவை ஏற்படின்

# நான் மீண்டும் புதுடில்லி செல்வேன்

– வரதராஜப் பெருமாள்

மாகாண சபைக்குரிய அதிகாரங்களை வழங்குவதற்கு, நேரடியாகத் தலையிட்டு தாம் நடவடிக்கை எடுக்கப்போவதாக ஜனாதிபதி பிரேமதாச உறுதியளித்துள்ளார். அவ்வாக்குறுதி நிறைவேற்றப்படாவிட்டால், நான் மீண்டும் புதுடில்லி செல்வேன்.

மேற்கண்டவாறு வட–கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் வரதராஜப் பெருமாள், திங்கட்கிழமை (மார்ச் 27) திருகோணமலையில் நடைபெற்ற மாகாணசபைக் கூட்டத்தில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: ''மாகாண சபைக்குரிய அதிகாரங்கள் ஒழுங்காகப் பரவலாக்கப்படவில்லை. இலங்கை அரசாங்கமும் அதிகாரிகளும் இதற்கு ஒத்துழைப்புத் தருவதாயும் இல்லை. எனவே, அது பற்றி இலங்கை–இந்திய உடன்படிக்கையில் தமிழர் சார்பில் கைச்சாத்திட்ட இந்தியாவிடம் எடுத்துரைப்பதற்காகவே நான் புதுடில்லி சென்றேன்.

இந்நாட்டின் சில பத்திரிகைகளும், ஆளும் கட்சி, எதிர்க்கட்சியிலரும் இந்த இந்திய விஜயம் தொடர்பாக தவறான கருத்துக்களைப் பரப்பி, ஒரு பூகம்பத்தைக் கிளப்பியுள்ளதாகவும் அறிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நிகழ்வுகள்...

(11ஆம் பக்கத்தொடர்ச்சி)

தப்பிச் சென்றனர் □ யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட முதலாம் வருடப் பரீட்சைகள் ஆரம்பமாகின □ வல்வை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் அமைதிப் படையினர்சோதனை நடத்தினர். ஆலயத்தின் புனிதமும், ஆசாரமும் மீறப்பட்டதாக ஆலய நிர்வாக வட்டாரங்கள் குறைப்பட்டுக் கொண்டன □

#### 28-3-89 செவ்வாய்

நல்லூர், பாஷையூர்ப் பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டன □ நாடுமுழுவதும் உடனடி யுத்தநிறுத்தத்தை அமுல்படுத்தி, நெருக்கடிக்கு உகந்த தீர்வை அரசு முன்வைக்க வேண்டுமென, தினேஷ் குணவர்த்தன 'பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார் □

### வேலிக்கு.....

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

முடியாது: இந்தப்பாணியில் தான் அவர்களது அறிக்கை பெருப்பாலும் அமையுமென ஊகிக்கலாம்.

இதற்கு, அண்மையில் சர்ச்சைக்குரிய உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கொழும்பிலிருந்து வெளிவரும் ஞாயிறு ஆங்கிலப் பத்திரிகைக்கு அளித்தபேட்டி கோடிட்டுக் காட்டுகின்றது.

இந்த நாட்டு மக்கள் அனைவரினதும் — சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், ஏனைய இனத்தோர் — அடிப்படை மனித உரிமைகள் பயங்கரமாக அரசு சாதனங்களினால் மீறப்பட்டு வரும் இவ் வேளையில், அரசு அதிகாரிகள் 'வேலியும் ஒணானும்' விளையாட்டில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கு அரசாங்கமும் உடந்தையாகவிருக்கின்றதோ எனப் பொது மக்களின் மனதில் நியாயமான சந்தேகம் எழுந்துள்ளது.

**இன்று எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் முன்வைக்க வேண்டிய உடனடி, முக்கிய ஏகமனதான கோரிக்கை இதுவே: கண்துடைப்பு விசாரணைகள் வேண்டாம். பக்கச்சார்பற்ற, ஜனாதிபதி ஆணைக்குழுவை நிறுவி இச்சம்பவங்களை விசாரியுங்கள். அல்லது, நாடாளுமன்றத்திலுள்ள சகல கட்சிகளின் பிரதிநிதிகளும் அடங்கிய ஓர் குழுவினை நிறுவி, விசாரணையை நடாத்துங்கள். குற்றவாளிகளை நீதிமன்றத்தின்முன் நிறுத்துங்கள்.**

ஜே. வி. பி. மீதுள்ள நியாயமான வெறுப்பால், சில எதிர்க்கட்சிகள் இதனைக் கோருவதற்குப் பின் நிற்கலாம்.

அவர்கள் ஒன்றை மனதில் கொள்ள வேண்டும்; இன்றைய பின்னணியில், அவசரகால நிலை நீக்கப்பட்டிருக்கும் இக்கட்டத்தில், இக்கோரச் சம்பவங்கள் எல்லாம் நடைபெற முடியுமென்றால், பாதுகாப்புப் படையினரின் கைகளை (துப்பாக்கிகளை), பலப்படுத்தும் வகையில் அவர்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் நாடாளுமன்றத்தால்' வழங்கப்பட்டால் நிலைமை என்னவாகவிருக்கும்? இவ்வாறு வழங்குவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

**நாசி ஜெர்மனியில் வாழ்ந்த ஒருவர் கூறியது போல: எனது அண்டைவீட்டாரைக் கைது செய்தார்கள், நான் மௌனியாக இருந்தேன். இன்று என்னைக் கைதுசெய்ய வந்தார்கள். குரல் கொடுக்க ஒருவருமே இல்லை.**

**எதிர்க்கட்சிகள் தமது இன்றைய பொறுப்பை உணர்ந்து அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.**

### முல்லைத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற மிருகங்கள் முல்லைத் தீவுபட்டினத்தில் நடமாடுவதாகவும் தெரிகிறது. மனிதர்களைப் போல் அவைகளும் அகதிகளாகின்றன.

மேலும் உக்கிரமான இராணுவத் தாக்குதல்களிற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதைத் தமது குழு அவதானித்ததாயும், இராணுவத் தீர்வால் பிரச்சனையைத் தீர்க்கவே முடியாதென்றும் அநியாயமாக அப்பாவிப் பொதுமக்கள் தான் பாதிப்படைவார்களென்றும் அப்பேச்சாளர் மேலும் சுட்டிக் காட்டினார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்குச் சென்ற அக்குழு தயாரித்த விரிவான அறிக்கை 'திசை'யின் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

## ஒப்பாரி

இறந்தவர்களை நினைந்து ஒப்பாரி வைப்பது கீழைத்தேச மரபு.

கைகூடாமற்போன ஆசைகள் பற்றியும் ஒப்பாரி வைக்கலாம்.

இந்த வகையில் பெருந்தோட்டத்துறை அமைச்சர் காமினி திசநாயக்க நாடாளுமன்றத்தில் பேசுகையில் ''இலங்கை—இந்திய சமாதான உடன்படிக்கை செய்யப்படுவதற்கு உறுதுணையாக இருந்தவன் நான். எனக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுமேயானால் அந்த உடன்படிக்கையில் வெற்றிகரமான அமுலாக்கத்துக்கு நான் மீண்டும் பாடுபடுவேன்'' எனக் கூறினார்.

தான் எதிர்பார்த்திருந்த பிரதமர் பதவியினை யாரோ ஒருவர் தட்டிக்கொண்டு போய்விட்டாரே என்ற அங்கலாய்ப்பின் வெளிப்பாடு தான் இது.

## ஆசியாவின் சுவிற்சர்லாந்துக்கு என்ன நடந்தது?

ஆசியாவின் சுவிற்சலாந்து என 40 வருடங்களுக்குமுன்னர் வர்ணிக்கப்பட்ட இலங்கைக்கு இன்று என்ன நடந்துவிட்டது?

இந்தக் கேள்வியினை நாடாளுமன்றத்தில் எழுப்பிய அமைச்சர் காமினி திசநாயக்கா அதற்குவிடையுமளித்தார், ''இலங்கை இன்று மூன்றும் உலகின் வறிய பொருளாதார நிலை நாடுகளில் ஒன்றாக வர்ணிக்கப்படுகின்றது. இதற்கு யார் பொறுப்பு? சுதந்திரத்திற்குப் பின்னர் ஐ.தே.க. ஆட்சியினர் காலமென்றால் என்ன, சு. க. ஆட்சிசெய்த காலமென்றால் என்ன, பொறுப்பிலிருந்து நாமெவருமே தப்பிச் செல்ல முடியாது. நீங்களும் பொறுப்பு நாங்களும் பொறுப்பு. இதை இனியும் ஒப்புக் கொள்ளாமலிருக்க முடியாது.''

இன்று தோன்றியுள்ள இனப்பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிடும்போது அமைச்சர் கூறியதாவது, ''வடக்கிலும் தெற்கிலும் ஆயுதப்போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளஒரு அபாயகரமான சூழ்நிலையை மனதிற் கொண்டுதான் விவகாரங்களை நாம் நோக்க வேண்டும், 1977ஆம் ஆண்டு ஜனாதிபதி மாளிகையில் நான் முதன் முதலாக காணி நீர்ப்பாசன அமைச்சராக திரு. வில்லியம் கோபல்லாவ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்ட போது என்னை ஒரு புறமாக அழைத்துச் சென்ற அவர் தமிழர்களின் பிரச்சினை இன்று பாரதூரமானதாக உள்ளது. அதற்கு விரைவான தீர்வொன்றைக் காணுமாறு பிரதமரிடம் கூறுங்கள். இப்போது தீர்வைக் காணவிட்டால் நிலைமை பாரதூரமாகிவிடும் என்றார்.''

1977 இல் பிரதமராக இருந்தவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன.

## பொதுமக்களே கூடுதலாகக் கொல்லப்பட்டனர்

— புலிகள்

நித்திகைக்குளத்தில் அமைதிப்படை மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளால் 300க்கு மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர் என, விடுதலைப்புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கை குறிப்பிடுகின்றது.

இவ்வறிக்கை கொழும்பிலிருந்தும் வெளியாகும் 'சண்டே ரைம்ஸ்' சில் (மார்ச் 26) பிரசுரிக்கப்பட்டுள்ளது.

புலிகள் சார்பில் 6 பேர் கொல்லப்பட்டதாகவும், 20 அமைதிப் படையினர் கொல்லப்பட்டதுடன், 50 பேர் காயமடைந்தனர் என்றும் அவ்வறிக்கை மேலும் கூறுகின்றது.

## மாகாணசபை இருந்தும் சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறது

மாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் தமிழ் பகுதிகளில் இப்பொழுதும் நடைபெற்று வருகின்றது என மாகாண சபை உறுப்பினரான பி. சூரியமூர்த்தி( ஈ,என். டி. எல். எவ்) வட – கிழக்கு மாகாணசபை 27ஆம் திகதி கூடியபொழுது, குற்றஞ் சாட்டினார்.

அவர் மேலும் கூறியதாவது: மாகாண அரசு எந்த நோக்கத்திற்கு உருவாக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதோ அந்த நோக்கம் பூர்த்தி செய்யப்படவில்லை. சில வாரங்களுக்கு முன்னர் மீனவரென்ற போர்வையில் திருமலை – புல்மோட்டையில் சிங்களக் குடியேற்றம் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு அனர்த்தங்கள் காரணமாக, 114 வீடுகள் எரிக்கப்பட்டு 1200 குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன. இந்திய இராணுவம் வந்தவுடன் அமைதி கிடைக்குமென்று நம்பிய தமிழ் மக்களின் அபிலாஷைகள் அவர்களாலேயே சிதறடிக்கப்பட்டுள்ள நிலைமை கவலைக்குரியது.

### அவுஸ்தி...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

அவ்வேண்டுகோளில்:–
தமிழ் இயக்கங்கள் ஓரணியில் திரளுங்கள். பழிவாங்கும் செயல்களை நிறுத்துங்கள். பொது எதிரியை இனங்கண்டு ஒற்றுமையைப் பேணுங்கள். தமிழர் பிரதேசங்களில் புனரமைப்புக்கு வழிகோலுங்கள். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு புனர்வாழ்வு வழங்குங்கள் கடத்தல், படுகொலைகளை நிறுத்தி மரணபயத்தை நீக்குங்கள், எனவும் சொல்லப்பட்டுள்ளது. இவ்வேண்டுகோளின் பிரதிகள் இயக்கத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## ம. கி. வேலைகளை இழந்தோர் அவலம்

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை செய்த பலர், 1987 யூலை மாதத்திற்குப் பின்னர் விடுமுறையில் வந்து, மீண்டும் திரும்பிச் செல்ல முடியாதபடி நாட்டில் வன்செயல்கள் வெடித்தன. பல நாட்கள் தொடர்ந்து ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு விமான நிலையத்திற்கு உரிய காலத்தில் திரும்பிச்செல்ல, அந்நாளையில் வாகனப் போக்குவரத்து இருக்கவில்லை. இதனால் அவர்கள் எடுத்துவந்த விசா, ரிக்கட் முதலியன காலாவதியாகின. மீண்டும் அவற்றைப் புதுப்பிக்க வசதியாக சவூதி அரேபிய தூதரகம் இல்லை.

இவ்வாறு மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து லீவில் திரும்பிய பலர் கவலை தெரிவித்தனர்.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 1-4-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.